விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 252 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 12 வியாழக்கிழமை (28.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## 3 எலும்புக்கூட்டுத் தொகுதி செம்மணியில் அடையாளம்

### இதுவரை 169 மனித எச்சங்கள் இனங்காணப்பட்டுள்ளன




(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் மேலும் 3 மனித எச்சங்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனித புதைகுழி அகழ்வின் 2ஆம் கட்டத்தின் 35 ஆவது நாள் 15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி மனிதப் புதைகுழியை ஜனாதிபதி அநுர பார்வையிடலாம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பார்வையிடலாம் என கடற்தொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி 15ஆம் பக்கம் பார்க்க

## பொதுச் சொத்தை தவறாகப் பயன்படுத்தினால்

# யாராக இருந்தாலும் சட்ட நடவடிக்கை



### அமைச்சர் விஜித ஹேரத்

(கொழும்பு)

- ரணிலை விடுவிக்க இராஜதந்திர அழுத்தங்கள் இல்லை.
- ரணிலின் கைது அரசியல் பழிவாங்கல் அல்ல.
- சட்டம் அனைவருக்கும் சமமாகப் பிரயோகிக்கப்படும்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் உறவுகள் கவனயீர்ப்பு ஊர்வலம்



14ஆம் பக்கம் பார்க்க

## உதய கம்மன்பிலவுக்கு எதிராக விசாரணை

### குற்றப் புலனாய்வு நீதிமன்றில் தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிராக விசா 14ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் காணி விடுவிப்பு தொடர்பில் தீர்மானிக்க

### அமைச்சு மட்டத்தில் குழு

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் காணி விடுவிப்புத் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கு அமைச்சுக்கள் மட்டக் குழுவொன்றை ஸ்தாபிப்பது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக 14ஆம் பக்கம் பார்க்க

## மகிந்த, மைத்திரி, சஜித் தரப்புகள்

## ஜனநாயகம் தொடர்பில் பேசுவது சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானது

### அமைச்சர் இ.சந்திரசேகர்



(வவுனியா)

"சட்டம் தனது கடமையைச் சரிவரச் செய்யும்போது, குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவே கூட்டணி அமைத்து, அரசியல் பழிவாங்கல் புராணத்தை எதிரணி 15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மக்கள் இழந்த உயிர்களைத் தவிர அனைத்தையும் நாம் மீளத் தருவோம்

### யாழில் அமைச்சர் எச்.எம்.எச்.அபயரத்தன



(யாழ்ப்பாணம்)

வடக்கு மக்கள் இழந்த உயிர்களைத் தவிர அனைத்தையும் நாம் மீளவும் தருவோம் என பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி எச்.எம்.எச். அபயரத்தன தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 15ஆம் பக்கம் பார்க்க

## நாட்டு மக்களின் பிரச்சினையைத் தீர்க்கவே எதிர்க்கட்சிகள் கூட்டணி

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்காகவே எதிர்க்கட்சிகளால் பரந்துபட்ட கூட்டணி அமைக்கப்படுகிறது. அதனைவிடுத்து எந்தவொரு அரசியல் நோக்கமும் அதில் இல்லை என எதிர்க்கட்சி 14ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

உடுவில் மகளிர் கல்லூரிக்கு
அருகில் வீடு வளவு
விற்பனைக்கு உண்டு.

குகநேசன்
079 040 747 40 (UK)
0044 7904 074 740

## வேலையாட்கள் தேவை

கொக்குவிலில் இயங்கும் றெஜிபோம் டிசைன் செய்யும் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.

- வயது : 18 – 35 (பெண்கள் மட்டும்)
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

அனுபமுள்ளவர்கள் விரும்பத்தக்கது. (C-3754)


தொடர்பு: 075 039 4357


## ஆண்டு நிறைவு விழா

சங்கானைப் பிரதேச வைத்தியசாலையில் அமையப் பெற்றுள்ள நரம்பியல் புனர்வாழ்வு நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவானது எதிர்வரும் சனிக்கிழமை (30) காலை 9.00 மணிக்கு வைத்திய சாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

28.08.2025



அமரர் சோமசுந்தரம் விக்கினேஸ்வரன்

பிறப்பு : 25.11.1944 இறப்பு : 30.08.2014

அன்பின் திருவுருவே!
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டு பதினொன்றல்ல
ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடைபெறலாம்
நெஞ்சில் பதிந்த உங்கள்
நினைவலைகள் என்றென்றும்
நம்மை விட்டு நீங்காது


(5160)

தகவல்: குடும்பத்தினர்

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்வராஜா சிவலிங்கம்

(முன்னைநாள் உற்பத்தி முகாமையாளர் – யாழ்.புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், எஸ்.லிங்கம் ரிம்பஸ் உரிமையாளர்)



தோற்றம் 15.11.1940 மறைவு 23.08.2020

திதி : 28.08.2025

அன்புடன் வாழ்ந்தீர்கள் எதிலும்
அறனுடன் நடந்தீர்கள்
அறிவுடன் வலம்வந்தீர்கள் எவர்க்கும்
அரணாய் இருந்தீர்கள்

ஐந்தாண்டு ஓடினும் தந்தையே
எந்நொடியும் நின்நினைவே
எத்திசையும் நின்நிழலே.

குடும்பத்தினர் (1493)

ஜனனேதயம்,
அம்மன் வீதி, திருநெல்வேலி.

## ஆதனப் பெயர்மாற்றம்

23.07.2025ம் திகதிய வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஆதனப்பெயர் மாற்ற பத்திரிகைப்பிரசுரத்தில் 2ஆவது பந்தியில் **2230** ம் இலக்க பிரகடன உறுதி 30.04.2024 என கைபிழைபாடாக தவறுதலாக தட்டச்சு இடப்பட்டு பத்திரிகைப் பிரசுரத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**10 வருட காலம் நிறைவு பெற்ற பிரகடன உறுதியான 2230ம்** இலக்க உறுதி **30.04.2004** என திருத்தப்பட்ட பத்திரிகைப்பிரசுரம் கீழ்வருமாறு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 11 காரைதீவு வீதி, 281 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

செபஸ்ரியாம்பிள்ளை பிரான்சிஸ்கம்மா 30.04.2004 திகதியிட்டு பிரசித்த சி.எம்.அன்ரனிப்பிள்ளை முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2230ம் இலக்க பிரகடன உறுதியில், குறித்த எனது ஆதனத்தின் உறுதிகள் அண்மைக்கால இடம்பெயர்வின் போது தவறிவிட்டன அவற்றை இதுவரை எங்கு தேடியும் கிடைக்கவில்லை எனவும், எனது நீண்டகால ஆட்சியுமானதும், என உறுதிப்படுத்தி பிரகடனப்படுத்துகிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஆதனத்தை யோஜ் மரியதாஸ்சும் பிரான்சிஸ்கம்மாவும் 30.12.2012ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் 1612ம் இலக்க நிபந்தனை அறுதி மூலம் கிறிஸ்ரியன் சிலுவைதாசன் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை கிறிஸ்ரியன் சிலுவைதாசனும் பெண் சிசிலியம்மாவும் 14.12.2013ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் 1937ம் இலக்க அறுதி உறுதி மூலம் யோஜ் மரியதாஸ்சிற்கும் பெண் பிரான்சிஸ்கம்மா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

## ஆதன அட்டவணை

ஆதன பெயர் - சுரிவெளிக்காடு, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை J/85ம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நிலப்பரப்பு 03 குளி 16.12 (நிலப்பரப்பு மூன்று குளி பதினாறு தசம் ஒன்று இரண்டு)

தற்போது இவ்வாதனத்தை யோஜ் மரியதாஸ்சும் பெண் பிரான்சிஸ்கம்மாவும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார் எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது யோஜ் மரியதாஸ்சும் பெண் பிரான்சிஸ்கம்மாவும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்.மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

முதல்வர்,
யாழ். மாநகர சபை. (C-3751)

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 - 10 - 1951



இறப்பு 27 - 08 - 2025

### திருமதி காசிஸ்வர சிவலிங்க சண்முக சங்கரன் கமலாதேவி

காரைநகர் வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி காசிஸ்வர சிவலிங்க சண்முக சங்கரன் கமலாதேவி அவர்கள் நேற்று (27.08.2025) புதன் கிழமை காலமானார்.

அன்னார் அமரர் கா.வேலுப்பிள்ளை - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - லட்சுமி தம்பதியினரின் மருமகளும் காசிஸ்வர சிவலிங்க சண்முக சங்கரன் அவர்களின் அன்பு மனைவியும் சி.யசோதா, த.பிரபாலினி, கு.பேரின்பவதனா, சே.தயாளினி, கா.அரிகர குமார், சி.தாரணி ஆகியோரின் அன்புத் தாயாரும் இ.சிவ குமாரன், லே.தனாபலன், சோ.குமாரசுந்தரம், கு.சேந்தன், அ.ரேவதி, மு.சிவபாலன் ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்சன், தனுயா, அஷ்னி, கவின், இனியன், அஸ்வின், தர்மிகா, மேனகா, தனோச், திசான், சிபிக்சன் ஆகியோரின் பேர்த்தியும் மகேஸ்வரி, கணேஸ்வரி, காலஞ்சென்றவர்களான விக்கினேஸ் வரன், பொன்னம்பலம் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற வர்களான பே.பத்துமாவதி, அ.செல்வராணி, நீதிராசா மற்றும் கெங்காதேவி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2025) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 624 8913,
076 604 3903 (1494)

தகவல் :
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மையற்ற அரச அதிகாரிகளுக்கு எதிராகவும் சட்டம் பாயும்!

## பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க

**(கொழும்பு)**

**அரச அதிகாரிகள் நேர்மையாக செயற்படத் தவறினால், அதன் விளைவுகளை எதிர் கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும் என பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தெரி வித்துள்ளார்.**



தமது தலைமையில் இடம் பெற்ற மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத் தின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் முன்னாள் ஜனாதி பதிக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அதிகாரிகளுக்கு எதிராகவும் அது நடை முறைப்படுத்தப்படும் என்றும் பிரதி அமைச்சர் குறிப்பிட் டுள்ளார்.

இந்தநிலையில், மாவட்ட ரீதியான குழுக்கள் அமைக் கப்பட்டு மக்களின் காணிகள் விடுவிக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டுள்ளதாக அவர் இதன்போது குறிப்பிட்டுள் ளார். (நி)

## தேசபந்துவுக்கு பிணை

(கொழும்பு)

முன்னாள் பொலிஸ் மா அதி பர் தேசபந்து தென்னக்கோனை பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ள முன்னாள் பொலிஸ் மா அதி பர் தேசபந்து தென்னக்கோன் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர் பான விசாரணைகளில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் சந்தேக நபராக பெயரிடப்பட்டிருந்தார்.

இதனையடுத்து முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மிரிஹான பகுதி யில் உள்ள அவரது வீட்டில் வைத்து ஒகஸ்ட் 20 ஆம் திகதி குற்றப் புலனாய்வு பிரிவின் அதிகாரி களால் கைது செய்யப்பட்டு நீதி மன்ற உத்தரவின் கீழ் விளக்கமறி யலில் வைக்கப்பட்டிருந்த நிலை யில் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி)

## குளியாப்பிட்டிய விபத்தில் மாணவர்கள் உட்பட மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

குளியாப்பிட்டிய பகுதியில் நேற்றுக் காலை ஏற்பட்ட விபத் தில் மூன்று பேர் உயிரி ழந்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்றும், மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் லொறியும் மோதியே இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.



குளியாப்பிட்டிய, பல்லே வெல, விலபொல பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற இந்த விபத் தில் இரு பாடசாலை மாணவர் களும், வான் சாரதியும் உயிரி ழந்துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

மேலும், விபத்தில் 13 மாணவர்கள் காயமடைந் துள்ளதாகவும், அவர்கள் சிகிச் சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் ஆரம்பக் கட்ட தகவல்கள் தெரி விக்கின்றன.

விபத்து தொடர்பான மேல திக விசாரணைகளை குளி யாப்பிட்டிய பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர். (நி)

## 14 வழக்குகள் உள்ளன முடிந்தால் கைது செய்யுங்கள்

## மகிந்த சவால்



(கொழும்பு)

தனக்கு எதிராக 14 வழக்குகள் உள்ளதாக முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ச தெரிவித்துள்ளார்.

எங்கள் மீது தவறு இருப் பதாக ஆதாரங்கள் இருந்தால் வழக்குத் தாக்கல் செய்யுங்கள், அதனை சந்திக்க தயாராக இருக்கிறோம் என அநுர அரசாங்கத்திற்கு மகிந்த சவால் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடக மொன்றுக்கு கருத்து வெளி யிட்ட மகிந்த இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்து விளக்கமறியலில் வைத்ததன் மூலம், அவரை இன்று ஹீரோவாக மாற்றி யுள்ளனர்.

நாட்டில் அனைவர் மத்தி யிலும் பேசப்படும் ஒரு வீரனாக ரணில் மாறியுள்ளார். அதற் கான வாய்ப்பினை இந்த அர சாங்கம் செய்து கொடுத்துள் ளதாக மகிந்த குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை, ரணில் பிணையில் செல்ல அனு மதிக்கப்பட்ட நிலையில், ராஜபக்ச குடும்பத்தினரை பற்றிய பேச்சுகள் அதிகரித் துள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி)

## உ.கிழங்கு, வெங்காயம் ஆகியவற்றின் சுங்கவரி அதிகரிப்பு நிதி அமைச்சு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் ஆகியவற் றின் மீதான விசேட பொருட்க ளுக்கான சுங்க வரியை அதிக ரிக்க அரசாங்கம் தீர்மானித் துள்ளதாக நிதி அமைச்சு தெரி வித்துள்ளது.

இந்த வரி திருத்தம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் மூன்று மாத காலத்திற்கு அமுலில் இருக்கும் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் இது தொடர் பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் உருளைக் கிழங்கு மீதான விசேட பொருட் களுக்கான சுங்கவரி 60 ரூபா விலிருந்து 80 ரூபாவாக அதிகரி க்கப்பட்டுள்ளது. அத்துடன், இற க்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயம் மீதான விசேட பொருட்களுக்கான சுங்க வரி 10 ரூபாவிலிருந்து 50 ரூபா வாக அதிகரிக்கப்பட்டுள்ளது. (நி)


பாராட்டி வாழ்த்துகின்றோம்





செல்வி.சத்தியசீலன் சனோஜா (3A)

செல்வி.சந்திரன் சினேகா (2A,B)

Best Wishes

எமது கல்லூரியில் கல்விகற்று க.பொ.த உயர்தரப் (2024) பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்று வெட்டுப்புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவிகளை பாராட்டி வாழ்த்துகின்றோம்

(1492)

யா/இணுவில் இந்துக்கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ரணிலுக்காக ட்ரம்பிடம் உதவி கோரிய நபர்



(கொழும்பு)

கொழும்பு கோட்டை நீதிமன்றத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இடம் பெற்ற போராட்டத்தின் போது ரணில் விக்கிரமசிங்கவின் ஆதரவாளர் ஒருவர் ஏந்தி யிருந்த பதாதை ஒன்று அனைவரினதும் கவன த்தை ஈர்த்துள்ளது. குறித்த பதாதையில் ட்ரம்ப், தயவு செய்து ரணிலுக்கு உத வுங்கள் என ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. (நி)

ஸ்ரீராமஜெயம்

# இணுவில் - மருதனார்மடம்

# அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில்

## மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் - 28.08.2025




வற்றாத செல்வமும் வளம்மிகு சோலைகளும் வானுயர்ந்த மலைகளும் பாய்ந்தோடும் நதிகளும் பக்தி நெறி வழுவா மக்களும் நிறைந்த ஞானபூமியான ஈழமணித் திருநாட்டின் சிரம் போல் விளங்கும் யாழ்ப்பாணத்தில் கமத்தில் திழைத்து, கலையில் மிளிர்ந்து, கருணையில் மூழ்கி, பக்தியில் தேறிய அன்பர்கள் வாழும் இணுவில் மருதனார்மடத்தில்!

மந்திர ஒலியும், மணிநாதமும், பஜனை இசையும் நாளும் கலந்த ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோவிலில் பாரிய கருங்கற் பணிகள் நிறைவுற்று மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவானது!

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வமங்கல விசுவாவசு வருஷம் ஆவணித் திங்கள் 12 ஆம் நாள் (28.08.2025) வியாழக்கிழமை சுவாதி நக்ஷத்திரமும், பஞ்சமி திதியும், சித்தாமிர்த யோகமும் கூடிய சுபதினத்தில் காலை 7.35 மணிமுதல் 9.18 மணிக்குள் வரும் கன்னி லக்ன சுபமுகூர்த்த வேளையில் நடைபெற ராமதாசன் அருள் பாலித்திருப்பதால், ஒன்பது தினங்கள் நடைபெறும் இப் பெருஞ்சாந்தி கிரியை வழிபாடுகளில் இணைந்து வழிபாடாற்றி ஹனுமன் திருவருள் கைகூட இகபர சுகங்கள் பெற்றுய்வீர் களாக!





### ஆலய பிரதமகுருவின் ஆசிச் செய்தி



மருதனார் மடம் அருள்வளர் அஞ்சனை மைந்தனுக்கு 28.08.2025 இன்று கும்பாபிஷேகம் மருதனார் மடத்தில் கோவில் கொண்ட அருள்வளர் ஆஞ்சநேயா இராமகாதையில் இராமபக்தனாக இலங்காபுரி இராவண கோட்டைக்குள் தனி ஒருவனாக மலைமிதித்து விண்ணைத் தாண்டிசமுத்திரம் கடந்து வீரத்துடன் போரிட்டு சீதாப்பிராட்டியை மீட்டுவந்த சத்திய ஆஞ்சநேயருக்கு வடபகுதியில் ஓர் ஆலயம். உலகெங்கும் பரந்து வாழும் பக்தர்கள் குறைதீர்த்திடும் நல் ஆலயம். இன்று குடமுழுக்கு காணக் கண் கோடி வேண்டுமையா ஆஞ்சநேயர் ஆலயம் முற்றும் முழுதுமாக கருங்கற்களால் நிர்மாணிக்கப்பட்டு எம்பெருமான் கும்பாபிஷேகம் காண்பது இன்னும் சிறப்பம்சமாகும்.

எனவே கும்பாபிஷேகத் திருநாளில் அனைவரும் எம் பெருமானின் இஷ்ட சித்திகள் கிடைக்கப்பெற வேண்டி அமைகிறேன்.

**சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள்**
**ஆதீன கர்த்தா, அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சனேயர் கோவில்**
**இணுவில் - மருதனார்மடம்**

### வாழ்த்துவோர்

Solo Fashion
FOR YOUR HAPPINESSS
சோலோ பஷன்
ssolofashion@gmail.com
No.433, K.K.S Road, Maruthanarmadam.
021 205 1616 077 415 7480

Hari Bol Square
Sir Pon Ramanathan Road,
(K.K.S Main Road)
Maruthanarmadam,
Jaffna.
•ROOMS & BUNGALOWS •JAFFNA - SKYLOUNGE
•RESTAURANT •ROOF TOP - RESTAURANT
•BANQUET (HALL)
076 666 7484, 021 321 2863, 021 224 3848

Trinco Automobile (Pvt) Ltd
Jaffna Automobile (Pvt) Ltd
TRINCOMALEE
No: 301/B/1 Kanniya Road,
Varothayanagar,
Trincomalee.
Tel: 026 222 5299,026 205 0676
JAFFNA
Kaithady Road,
Maruthanarmadam, Inuvil,
Jaffna.
Tel: 021 224 1955,021 224 0202
trincoaspl@gmail.com

ரொப் சில்க்
Top Silk

இல. 17A, நவீன சந்தை,
K.K.S வீதி, மருதனார்மடம்.
021 224 3332

அம்பாள்
Service station
K.K.S Road,
Maruthanarmadam.

(C-3753)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர்தலிங்கத்தின் நினைவுப் பேருரை



(யாழ்ப்பாணம்)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் 98 ஆவது பிறந்த நாள் நினைவுப் பேருரை நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் பொது சன நூலக கேட்போர் கூடத்தில் மன்னார் மாவட்ட மேனாள் அரசாங்க அதிபர் வி.விஸ்வலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நடைபெறும் இந் நிகழ் வில் "அதிகாரப் பரம்பல், அதிகாரப் பகிர்வு, பிராந்திய அபிவிருத்தி" எனும் தலைப்பிலான நினைவுப் பேருரையினை யாழ்.பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் "தேசம்-தேசியம்" எனும் தலைப்பில் சிறப்புரையினை மறவன்புலவு கே.சச்சிதானந்தன் அவர்களும் ஆற்றவுள்ளனர்.

இந் நிகழ்வில் முன்நாள் பேராயர். கலாநிதி. எஸ்.ஜெபநேசன் அடிகளாரிற்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (8)

# மணிமேகலை பிரசுரத்தின் புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மணிமேகலைப் பிரசுரத்தின் ஏற்பாட்டில் புத்தகக் கண்காட்சி இருநாட்கள் நடைபெறவுள்ளன.

இன்று 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கேட்போர் கூடத்திலும் நாளை மறுதினம் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் மாநாட்டு மண்டபத்திலும் குறித்த புத்தகக் கண்காட்சி நடைபெறவுள்ளன.

குறித்த நிகழ்வில் இலங்கை எழுத்தாளர்களின் சங்க இலக்கியம் ஒரு புதிய கண்ணோட்டம், கத்தரித் தோட்டத்து மத்தியிலே, என்னுயிர் கீதங்கள், அம்மாவின் பிள்ளைகள் போன்ற பல நூல்களும் இந்திய எழுத்தாளர்களின் மர்ம நாவல்கள், காதலெனும் தீவினிலே, ஒரு இலட்சம் துடிப்புக்கள் போன்ற பல நூல்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (8)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தாயின் மடியில் 28 . 08 . 1962



இறைவன் அடியில் 29 . 07 . 2025

அமரர். சோதிமலர் தங்கராசா

கடந்த 29.07.2025 செவ்வாய்க்கிழமை அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பவிளக்கு அமரர் சோதிமலர் தங்கராசா அவர்களின் 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் 28.08.2025 வியாழக்கிழமை இன்று மு.ப 11.00 மணியளவில் சந்தை வீதி கொடிகாமத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரது இழப்பின் துயரில் எம்மோடு துணை நின்றவர்களுக்கும் தொலைபேசி வாயிலாக ஆறுதல் கூறியோர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

சந்தை வீதி, கொடிகாமம்
076 446 3541


(C-3748)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.



## நீங்கா நினைவில்

4 ஆம் ஆண்டுகள் — 10 ஆம் ஆண்டுகள்



உதிரம் ஈர்த்த எம் தந்தையே உதரம் தந்த எம் தாயே
உம் பண்பான வாழ்வு எமக்கோர் மேல் வரிச் சட்டம்
உயர்வான எண்ணம் கொண்ட நீவீர் இருபேரும்
இல்லற இன்பத்தில் ஏழ்மகவை கண்டு திழைத்தீர்

தந்தை உம் புகழ் குடும்பமதில் மகிழ்வு கண்டது
கிராம சேவகர், பிரதேச சபை உறுப்பினர்,
சமாதான நீதவான் , சமூக சேவையாளன் என
நீர் வகித்த பதவிகளும் சேவையதும்
கரணவாய் பதியதில் என்றும் நிலைபெறும்

மறந்தும் மறவாமலும் எம் மனங்களில்
நிலை பெற்ற உம் ஆத்மா சாந்தி பெற
இறைஞ்சிடுவோம் தினம் இறைவனை.



மலர்வு - 15.09.1943 உதிர்வு - 21.08.2021
திதி - சதுர்த்தசி 06.09.2025
அமரர். கந்தன் இரத்தினம்
(ஓய்வு நிலை கிராம அலுவலர்)
சமாதான நீதவான் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினர்.

மலர்வு - 21.07.1943 உதிர்வு - 18.09.2015
திதி - பஞ்சமி 28.08.2025
அமரர். இரத்தினம் கமலாதேவி

(C-3749)

கரணவாய்,
அண்ணாசிலையடி, கரவெட்டி.

தகவல்- பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவில் மருதனார் மடம் அருள்வளர்
## ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் மஹா கும்பாபிஷேகம் இன்று

இன்று 28.08.2025 கைகளில் அர்ச்சனை தட்டேந்தி பக்தியுடன் வரிசை தவறாது பக்தர்கள் மருதனார்மடம் நோக்கி நாலாபக்கமிருந்தும் வரும் காட்சி மிகுந்த பரவசத்தையூட்டும்.

ஆம்! மந்திர ஒலியும் மணியின் நாதமும் பஜனை இசையும் கலந்து சுந்தர ஆஞ்சனேயர் பெருமானுக்கு மகாகும்பாபிஷேக பெருவிழா கோலா கலமாக கொண்டாடப் பெறுகின்றது.

கோவிலின் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்களின் தலை மையில் நூற்றுக்கணக்கான அந்தண பெருமக்களின் மந்திர ஒலியில் கோவில் கோபுரத்தின் உச்சியில் நின்று காலை 7.35 மணி முதல் 9.18 மணி வரை யான சுபமுகூர்த்த வேளையில் மஹா கும்பாபிஷேக திருநீர் பல்லாயிரக் கணக் கான பக்கதர்களின் "ஆஞ்சநேயருக்கு அரோகரா" ஒலியுடன் கலந்து பக்தர்கள் மேல் விசிறப்பட்டு சிறப்பாக அமையும்.

கிரியைகள் 20.08.2025 புதன் கிழமை காலை 9.05 மணிமுதல் 10.05 மணி வரையுள்ள சுபவேளையில் ஆரம்பமாகின.

எண்ணெய்காப்பு கிரியைகள் 25.08.2025 திங்கள் காலை 6.00 மணி முதல் 27.08.2025 புதன் கிழமை மாலை 04.00 மணி வரை நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டி ருந்தன.

இன்று மஹாகும்பாபிஷேகத்தினை தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபி ஷேகம் நடைபெற ஒழுங்குகள் செய் யப்பட்டுள்ளன.

தமிழர்களின் கலை கலாச்சாரங் களை மையப்படுத்தி தவில், நாதஸ் வரம், பாட்டு,வீணை, கடம் உட்பட இசைஞான நுட்பங்களும் தினமும் பல்வேறு குழுவினரால் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளமை விசேடமாக குறிப்பிடத் தக்கது.

வற்றாத செல்வமும், வளம்மிகு சோலைகளும் வானுயர் மலைகளும், பாய்ந்தோடும் நதிகளும் பக்தி நெறி வழுவாமக்களும் நிறைந்த ஞான பூமி யான ஈழமணித் திருநாட்டில் புகழ் பூத்த தேச பக்தர்கள் நிறைந்த யாழ்ப்பாணத் தில் மகிமை மிக்க மருதனார்மடத்தில் வானுயர வளர்ந்து நின்று காவல்புரியும் அருள்வளர் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் பெருமானுக்கு மகாகும்பாபிஷேக பெரு விழா கோலாகலமாக ஆரம்பித்துள்ளது.

ஸ்ரீராம பிரான் அவதரித்த பாரத



புண்ணிய பூமியில் எங்கெல்லாம் ஸ்ரீரா மனின் பாதங்கள் பட்டனவோ அங் கெல்லாம் எமது பாதங்களை வைத் தாலே போதும் எம்மோடு ஒட்டி வந்த பாவங்கள் பதறியடித்துக் கொண்டு பறந்து போய்விடும். ஸ்ரீராமன் மீது பக்தி கொண்டு சிரத்தையுடன் அவன் பாதங்களில் சரணாகதி செய்தாலே போதும் சர்வ வல்லமை பெற்ற அந்தப் பாதங்கள் எமக்கு சகல சௌகரியங் களையும் அள்ளிக் கொடுக்கத் தவறாது.

ராவணனுக்கு ராமனை நன்றாகவே தெரிந்திருந்தது. ஸ்ரீராமனிடம் அவன் பூரண சரணாகதி அடைந்தான் அதனா லேயே இலங்கைக்கு அதிபதியாகும் அரிய வாய்ப்பு பெற்றான் ஸ்ரீராமனின் பாதங்களுக்கு அவ்வளவு மகிமை யுண்டு பாதங்களுக்கு மட்டுமே மகிமை ராம நாதத்திற்கு இதைவிட அதிகமான வலிமையுண்டு.

அருள் வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் ஹமனுக்கு மஹாகும்பாபி ஷேகப் பெருவிழாவையொட்டி மருத னார்மடத்தில் உள்ள சந்தைகள் வர்த் தக நிறுவனங்கள் பாடசாலைகள், வங்கி கள், நிதி நிறுவனங்கள் எல்லாம் வாசலில் வாழை மரங்கள் நாட்டி மங் கள தோரணங்கள் கட்டி மலர் மாலை களால் அலங்கரித்து காணப்படுகின்றன. ஆஞ்சநேயர் கோயிலின் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் தலைமையிலான அந்தணர்கள் வேதம் ஓதி ஆஞ்சநேயபெருமானுக்கு பூஜைகள் அபிஷேகங்கள் மிக நேர்த்தியாக நிறை வேற்றும் காட்சி பக்தி பரவசமூட்டுவதாக அமையும்.

மகாகும்பாபிஷேக பெருவிழாவில் நாற்பத்தெட்டு தினங்களும் இசை ஆராதனை நிகழ்வுகள் அதிசிறந்த கலைஞர்களின் கலைஞானத்தால் உயர்ந்து விளங்குகிறது. தவில் கச்சேரிகள், நாதஸ்வர போட்டிகள், வாய்ப்பாட்டுடன் வில்லிசைகள் உட்பட பல கலைநிகழ்வுகள் இந்த 48 நாட்க ளும் இடம்பெறுவது வேறெந்த ஆல யங்களிலும் இல்லாத தனி சிறப்பு மிக்க தாகும். பக்தர்களும் இந்த நாற்பத்தெட்டு தினங்களும் பசியாற அன்னதான நிகழ்வும் விசேடமாக நடைபெறும்.

ஆலயத்தின் வாசலில் ஆஞ்சநேய ரின் எழுபத்தைந்தடி உயரமான சிலையை கண்டு பிரமிப்படையாதோர் எவருமில்லை எனலாம் தமிழ்நாடு காரைக்காலைச் சேர்ந்த இந்திய சிற்பி கள் குழுவினர் க.விஜயன் ஸ்தபதியின் தலைமையில் மிகக்குறைந்த நாட்களில் நிறைவு செய்த இச்சிலையானது வட மாகாணத்தில் உள்ள வேறெந்த ஆலயத்திலும் காணமுடியாத சிறப்பம்சம் நிறைந்ததாக கருதப்படுகிறது.

தைத்திங்கள் 2001 ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து மூன் றாம் வருடம் ராஜகோபுர கும்பாபிஷேகத் தினையும் ஆறாம் வருடம் விஷ்பரூப கும்பாபிஷேகத்தினையும் அதே ஆண்டு பஞ்சமுக ஆஞ்சநேயர் உற்சவ மூர்த்தி யையும் உருவாக்கியமை மிகவும் பாராட்டப்பட்டது.

2006 ஆம் ஆண்டு முதல் தடவை யாக தேர் நேர்த்தியாக செதுக்கப்பட்டு வெள்ளோட்டம் நடைபெற்றது. சுவிஸ் லாந்தில் வதியும் காரைநகரை சேர்ந்த வர்த்தக பிரமுகர் திருவாளர் கதிர்காமன் தனலட்சுமி குடும்பத்தினர் தேர் தயா ரிப்புக் கான முழுச் செலவையும் பொறுப் பேற்று நிறைவு செய்தமை பக்தர்களால் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆஞ்சநேயரின் மூல நட்சத்திரத் தன்று பூஜைகளும் பக்தர்களுக்கு பன் னிரு மாதமும் ஆலயத்தில் விசேட அன்னதானமும் அபிஷேகமும் இடம் பெறுகின்றது. ஒவ்வொரு வருடமும் கார்த்திகை தீபத்திருநாளில் உயிரிழந்த ஆத்மாக்களின் ஞாபகமாக விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்று உயிரிழந்த ஆத்மாக்களுக்கு அஞ்சலி செலுத்தப்படு கிறது.

"வாயு குமரனைப் போற்றி வாழ் வில் வளம் பெறுவோம்" .

**சபா. புஷ்பநாதன்**
**சத்தியப்பிரமாணமொழிப் பெயர்ப்பாளர், சுன்னாகம்.**

## கனிய மணல் அகழ்வுக்கு எதிராக 25 ஆவது நாளாகவும் போராட்டம்



(மன்னார்)

மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன் னெடுக்கப்பட்டு வரும் கவன யீர்ப்புப் போராட்டம் நேற்று புதன்கிழமை 25 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டது.

இந் நிலையில் குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரி விக்கும் வகையில் நானாட்டான் பிரதேச மக்கள் கலந்து கொண்டு ஆதரவை வழங்கியிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மன்னாரில் புதிதாக முன் னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போரா ட்டம் தொடரும் என போரா ட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (8-285)

## வீதிப் புனரமைப்பு ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை யின் பேருந்து நிலைய வீதி மற்றும் நடைபாதை என்ப வற்றின் புனரமைப்பு பணி கள் நகரசபையின் உப தவி சாளர் ஞா.கிஷோரினால் கடந்த 25 ஆம் திகதி திங் கட்கிழமை சம்பிரதாய பூர் வமாக ஆரம்பித்து வைக் கப்பட்டுள்ளது.

நகரை அழகுபடுத்தும் திட்டத்திற்கு அமைய பேருந்து நிலைய வீதி மற் றும் வீதியோடு இணைந்த நடைபாதை என்பன புனர மைக்கப்படவுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் தொழில் நுட்ப உத்தியோகத்தர், நகர முச்சக்கர வண்டிச் சங்கத் தினர், தனியார் சிற்றூர்திச் சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(8-30)

## இணுவில் ஆஞ்சநேயர் மகாகும்பாபிஷேகம் இன்று

(யாழ்ப்பாணம்)

இணுவில்-மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்ச நேயர் ஆலய மகா கும்பாபி ஷேகப் பெருவிழா இன்று வியா ழக்கிழமை காலை 7.35 மணி முதல் 9.18 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் இடம் பெறவுள்ளது.

தொடர்ந்து 48 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும் என ஆதீனகர்த்தா சிவஸ்ரீ. இ.சுந்தரேஸ்வரக்குருக்கள் அறி வித்துள்ளார். (8)

## முப்பெருந்தேவியர் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர் க்காதேவி ஆலய மகோற்ச வத்தின் நான்காம் நாள் திரு விழாவான "முப் பெருந்தேவியர் விழா" இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு ஆரம்பமாக வுள்ளது.

துர்க்கையம்மன், மகா லட்சுமி, சரஸ்வதி ஆகிய மூன்று தேவியரும் வீதியுலா வரும் நாள். ஆலய உள்வீதி முழுவதும் குத்து விளக்குகள் ஏற்றப்பட்டு தீபஜோதியாகக் காட்சியளிக்கும் சிறப்பு நாள் இன்று ஆகும். (8)

## வசந்த மண்டப அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக் கணம்பாய் அருள்மிகு ஸ்ரீ கண் ணகாம்பிகா சமேத கண்ண கேஸ்வரர் ஆலய பாலஸ் தாபன வசந்த மண்டப ஆரம்ப நிகழ்வாக நாளை வெள்ளிக் கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டப அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற உள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறியத்தருகின்றனர். (8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செல்லும் பாதை தவறாயின்

# ஐந்து ஆண்டுகளில் விரட்டுங்கள்!

## வீடமைப்பு பிரதி அமைச்சர் சரத்

**(கொழும்பு) ..............................**
**அரசாங்கம் சரியில்லை என்றால் ஐந்து ஆண்டுகளில் தங்களை விரட்டுமாறு வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பி. சரத் குறிப்பிட்டுள்ளார்.**

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு தெரிவித்த அவர் தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கமே இந்த நாட்டில் உருவான சிறந்த அரசாங்கம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.


அத்துடன் இந்த அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டு உச்ச அளவில் சேவைகளை பெற்றுக்கொள்ளுமாறு மக்களிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐந்து ஆண்டுகளின் பின்னர் இந்த



அரசாங்கம் சரியான பாதையில் செல்லவில்லை என மக்கள் தீர்மானித்தால் ஜனநாயக ரீதியான முறையில் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப முடியும் எனவும் பிரதி அமைச்சர் டி.பி.சரத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் சமூகப் பணி



**எம் இனிய உறவுகளே வணக்கம்!**

யாழ் விழிப்புலனற்றோர் சங்கம் இன்றுவரை மனித நேயம் மிக்க தங்கள் நிதி உதவியோடு ஏராளமான சமூகப்பணிகளை கண்ணிழந்த உறவுகளுக்கு தாராளமாக ஆற்றிவருவதை தாங்கள் யாவரும் அறிவீர்கள். வீட்டில் முடங்கிய விழியிழந்தவர்கள் கல்வி, கலை, தொழில் என்று பல்பரிமாணத்தில் வாழ்வதற்கு புது விதி எழுதி வருகின்ற யாழ் விழிப்புலனற்றோர் சங்கம் தற்போது காணி வீடின்றி கண்ணீரிலும், மழைத் தண்ணீரிலும் அவலப் பட்டு வந்த கண்ணிழந்த உறவுகளுக்கு தனவந்தர்களின் நிதிப் பங்களிப்போடும் ஆலயங்கள், அறக்கட்டளைகள், மன்றங்களின் நிதிப்பங்களிப்போடும் காணிகளைப் பெற்றுக் கொடுத்தும் பாதுகாப்பான சுகாதார வசதிகளோடு கூடிய மனைகளை அமைத்தும் வழங்கி வருகிறது.

அந்தவகையில் 18 பார்வை யற்றவர்களுக்கு தங்கள் நிதி உதவியோடு பல இலட்சம் ரூபா பணத்தில் காணிகளைத் தருவித்து வழங்கிய நிறுவனம் 24.08.2025 அன்று மிருசுவில் பழைய வாய்க்கால் வீதியில் கனடா குமரன் விளையாட்டுக்கழக அனுசரணையில் மனை களை நிறுவியும் சிவபூமி அறக்கட்டளை, சந்நிதியான் ஆச்சிரமம், உசன் கந்தசாமி கோவில், ஆனந்த சீரடி சாயி தேவஸ்தானம் சிறுவிளான், சாவகச்சேரி பிரதேச சபை ஆகிய அமைப்புக்களின் அனுசரணையோடும் காருண்யம் மிக்க தங்கள் நிதி அனுசரணையோடும் கிணறுகள், மலசல கூடங்கள், குளியலறைகள், நீர் வசதிப்படுத்தல்கள், மின்னிணைப்பு வேலைகள், மனை களின் தலைவாயில் வேலைகளினையும் அமைத்து அரசாங்க அதிபர் திரு.மருதலிங்கம் பிரதீபன் பிரதம அதிதியாகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சிவசுப்ர மணியம் ரகுராம் அவர்கள் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொள்ள அருள்வாக்குச் சித்தர் கேதீஸ் வரக்குருக்கள் அவர்களும் சாயி கண்ணன் சீரடி சாயி தேவஸ்தானம் சிறுவிளான் அவர்களும் ஆசியுரை வழங்க திரு.அழகராஜா பிரதீபன் கிராம சேவையாளர் J/336 அவர்களும் சமுர்த்தி உத்தியோகத்தர் திருமதி.சியோசினி செந்தூரன் J/336 அவர்களும் கௌரவ அதிதிகளாக கலந்து கொள்ள யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலை வர் யோகலிங்கம் சுதாகரன் அவர்களின் தலைமையில் குமராபதி மனைத் தொகுதி அங்கு ரார்ப்பணம் செய்யப்பட்டு அவர்களின் பூஜையறை யில் வழிபாட்டுப்படங்கள் வைக்கப்ப டுகின்ற காட்சிகளையும் நீங்கள் காண லாம்.

உறவுகளே இதுவரையும் முகவரியின்றி கண்ணீரில் குளி த்த எமது ஐந்து பயனாளிகளும் தங்கள் சொந்த மனைகளில் பன்னீர் தெளித்து புன்னகையோடு வாழவைத்த தனவந்தர்கள் தொண்டு நிறுவனத்தைச் சார்ந்தவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கிறோம்.

உறவுகளே தங்கள் அறிவு வளம், மனித வளம், பொருள் வளம் என்பவற்றை வாரி வழங்கி 2026ஆம் ஆண்டு பொன்விழாவைக் காண இருக்கும் எமது நிறுவனம் பொன் விழாக் காணும் போது எமது நிறுவனத்தின் அங்கத்தவர்கள் யாரும் காணி வீடின்றி இருக்க கூடாது என்ற கனவை மெய்ப்பட கரங்கோர்க்குமாறு தங்களைத் தாழ்மையுடன் வேண்டுகிறோம். தங்கள் ஆதரவால் அரவணைப்பால் பொன் விழாக் காண இருக்கின்ற எமது நிறுவனம் தங்கள் நேசிப்பால் வையத்தில் பார்வையற்றவரின் தேவை இருக்கும் வரை வாழும் என்பதில் ஐயமில்லை தொடர்ந்தும் எமது சமூகப் பணியோடு இணைந்திருங்கள்.

நன்றி

**யாழ் விழிப்புலனற்றோர் சங்கம்**
**28,முதலாம் ஒழுங்கை, கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம். 021 222 7336**

(5153)



# இன்று 28.08.2025 ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில்

## மஹாகும்பாபிஷேகம் இணுவில் மருதனார்மடம் - 'ராம' நாமம் போற்றி வணங்குவோம்

**பிணிகள் விலகும் பெருமை சேர்க்கும்**
**அணிகள் செல்வம் ஆயுளும் வளரும்**
**கல்வி பெருகும் கர்மம் தொலையும்**
**பல்வகை வளமும் பாங்காய்ச் சேரும்**

சிவபூமியாகிய ஈழத்திருநாட்டில் யாழ்ப்பாணம் எல்லா விதமான பக்தி பூரணமாகவும் **வாக்கு, மனம், புத்தி, சித்தம், அகங்காரம், ஞானம், அஞ்ஞானம்** ஆகியவற்றால் ஏற்படும் **பாப தோஷங்களைப் போக்கி எப்போதும், எங்கும்** ஸ்ரீ **சுந்தர ஆஞ்சநேயர்** பாது காக்கட்டும். இன்று எமக்கு பாதுகாப்பு அவசியம் ஆதலால் "ராம" நாமம் பல சாதனைகளைச் சாதித்து உலகத்தில் இகபர சுகங்கள் தரும் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கும்பாபிஷேகம் கண்டு தரிசித்து இறை திருவருள் பெறுவோம் **"ஓம் ஸ்ரீ ராம ஜெயம்"** நாம் **பல தடவை** பக்தியாக ஆஞ்ச நேயர் துதி செய்வோம்.

**அஞ்சிலே ஒன்று பெற்றான்**
**அஞ்சிலே ஒன்றைத் தாவி**
**அஞ்சிலே ஒன்றாக ஆரியர்க்காக ஏகி**
**அஞ்சிலே ஒன்று பெற்ற**
**அணங்கைக் கண்டு அயலாரூரில்**
**அஞ்சிலே ஒன்றை வைத்தான்**
**அவன் அளித்துக் காப்பான்.**

இந்தியா அருள்மிகு இராம நாத சுவாமி திருக்கோயிலின் கிழக்கு நோக்கிய பிரதான வாசலில் அடியவர்கள் உள் நுழையும் போது வலது கைப்புறம் **ஆஞ்சநேயர் சந்நிதி தெற்கு நோக்கியிருக்கிறது.**

அவர் திருவுருவத்தில் சிவப்பு வண்ணம் பூசப் பெற்றிருக்கிறது. சிவப்புச் சந்தனம், தீர்த்தம், துளசிப் பிரசாதங்கள் இங்கு சந்நிதியில் சாதிக்கப் பெறுகின்றன.

**ஆஞ்சநேயர் கைலாசத்திலிருந்து கொண்டு வந்த இரண்டாவது லிங்கம்** இந்த கோயில் பிரகாரத்தில் இருக்கின்றது.

எங்கும் மந்திர ஒலியும், மணிநாதமும், பஜனை இசையும் எந்நாளும் கலந்த ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் கருங்கல் பணிகள் நிறைவுற்று மஹா கும்பாபிஷேகம் தரிசித்து சகல பேரருள் பெற்று உய்வோம்.

**ஒருமை மனதால் உன்றனைத் துதிக்க**
**அருமை மனதை அளித்திடு தேவா**
**அகந்தைக் கிழங்கின் அடிவே றறுத்துப்**
**பதுமாய் வாழும் பான்மை யருள் வாய்**

ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் சரணம்
அருளடி சரணே!
ஓம் கெடுதியைச் சாய்த்துர நீக்கும்
அனுமனே போற்றி

**க.கு.க.சிவபாலன்**
**காரைநகர் ஈழத்துச் சிதம்பரம்,**
**மாணிக்கவாசகர் மடாலயம்.**



(C-3747)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## செல்பி எடுப்பதில் ஆபத்தான நாடுகள் பட்டியலில் இந்தியாவுக்கு முதலிடம்



(வோஷிங்டன்)

செல்பி எடுப்பதில் ஆபத்தான நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள திபார்பர் சட்ட நிறுவனம், கடந்த 2014 முதல் 2025 மே மாதம் வரை செல்பி எடுக்கும்போது ஏற்பட்டுள்ள உயிரிழப்புகள் மற்றும் காயங்களை கண்காணித்து ஆய்வு நடத்தியது.

இந்த ஆய்வு, செல்பி எடுக்க நேரடியாக முயற்சித்து மரணத்தை விளைவிக்கும் நிகழ்வுகள் குறித்து செய்திகள் மற்றும் கட்டுரைகளை அடிப்படையாக பயன்படுத்தி நடத்தப்பட்டது.

அதில் அதிக மக்கள் தொகை, ரயில் தண்டவாளங்கள், பாறைகள் போன்ற ஆபத்தான இடங்களுக்கு செல்வது, சமூக ஊடக கலாசாரம் உள்ளிட்ட பல காரணிகளை ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர்.

அதன் அடிப்படையில் ஆய்வு செய்யபட்டது.

இதில் உலகளவில் பதிவான அனைத்து நிகழ்வுகளில் 42.1 சதவீதம் இந்தியாவில் நிகழ்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனடிப்படையில் ஆபத்தான நாடுகள் பட்டியலில் இந்தியா முதலிடத்திலும், அமெரிக்கா இரண்டாவது இடத்திலும் உள்ளதாக தெரியவந்துள்ளது. (நி)

## தென்கொரிய பாடசாலைகளில் மொபைல் பாவனைக்கு தடை



(சியோல்)

பாடசாலை வகுப்பு நேரங்களில் மொபைல் போன்கள், ஸ்மார்ட் சாதனங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் சட்டமூலத்தை தென்கொரியா நிறைவேற்றியுள்ளது.

சிறுவர்கள் மற்றும் பதின்ம வயதினரிடையே மொபைல் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் அண்மைய நாடாக இதன் மூலம் தென்கொரியா மாறியுள்ளது.

அடுத்த கல்வியாண்டு 2026 மார்ச் முதல் நடைமுறைக்கு வரும் இந்தச் சட்டம், மாணவர்களிடையே ஸ்மார்ட்போன் பழக்கத்தைக் கட்டுப்படுத்த இரு கட்சிகளும் மேற்கொண்ட முயற்சியின் விளைவாகும்.

ஸ்மார்ட்போன் பயன்பாடு மாணவர்களின் கல்வி செயல்திறனைப் பாதிக்கிறது என்றும், அவர்கள் கல்வியில் செலவிடக்கூடிய நேரத்தை வீணடிப்பதாகவும் சட்ட மியற்றுபவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நேற்று புதன்கிழமை பிற்பகல் இந்த சட்டமூலம் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது. 163 உறுப்பினர்களில் 115 பேர் ஆதரவாக வாக்களித்தனர். (நி)

# ஜம்மு - காஷ்மீரில்

## ❁ 31 பேர் உயிரிழப்பு
## ❁ 23 பேர் காயம்
## ❁ மீட்புப் பணிகள் தீவிரம்

**ஜம்மு காஷ்மீரின் கத்ராவில் உள்ள வைஷ்ணவ தேவி ஆலயம் அருகே கனமழையால் ஏற்பட்ட மண்சரிவில் சுமார் 31 பேர் உயிரிழந்துள்ளனர்.**



நேற்று ஏற்பட்ட பெரும் மண்சரிவில் 23 பேர் காயமடைந்தனர்.

அனர்த்தத்தில் மேலும், பலர் சிக்கியிருக்கலாம் என்ற அச்சத்தின் மத்தியில் மீட்புக் குழுவினர் மீட்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஜம்மு காஷ்மீர் முழுவதும் இடைவிடாத மழையால் பெரும் சேதம் ஏற்பட்டுள்

## அரிய வகை காந்தங்களை தர மறுத்தால் சீனாவுக்கு 200 சதவீத வரி - மிரட்டும் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

அரிய வகை காந்தங்களை அமெரிக்காவுக்கு வழங்காவிட்டால், 200 சதவீதம் வரி விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் சீனாவுக்கு மிரட்டல் விடுத்துள்ளார்.

தானியங்கி வாகனங்கள், மின்னணு சாதனங்கள் மற்றும் பாதுகாப்புத்துறை உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் மிக முக்கியமாக அரிய வகை காந்தங்கள் பயன்படுத்தப் படுகின்றன.

இந்த முக்கிய கனிமங்களின் உற்பத்தியில், நம் அண்டை நாடான சீனா ஏகபோக உரிமையை கொண்டுள்ளது. இதன் காரணமாக, உலக வர்த்தகத்தில் தனி செல்வாக்குடன் சீனா உள்ளது.

இந்நிலையில், அரிய வகை காந்தங்களின் ஏகபோக உரிமையை தன் கட்டுப்பாட்டில் புத்திசாலித்தனமாக சீனா வைத்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பாராட்டு தெரிவித்துள்ளார்.

அதே வேளையில், அமெரிக்காவுக்கு இந்த அரிய வகை காந்தங்களை வழங்கவில்லை என்றால், சீனா மீது 200 சதவீதம் வரை வரி விதிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து ட்ரம்ப் நேற்று முன்தினம் கூறியுள்ளதாவது:

அமெரிக்கா - சீனா இடையே சிறப்பான உறவு இருந்தாலும், சீனாவை விட அமெரிக்கா அதிக செல்வாக்கை கொண்டுள்ளது.

அவர்களைவிட எங்களிடம் மிகப்பெரிய மற்றும் சிறப்பான அஸ்திரங்கள் உள்ளன. நான் அந்த அஸ்திரங்களை பயன்படுத்தினால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## ல் மண்சரிவு!



ரம்

ரிவில் 23

, பலர்
ச்சத்தின்
ர் மீட்பு
பருகின்ற

டைவிடாத
ற்பட்டுள்

ளது.

இதனால் திடீர் வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

ஜம்முவில், பாலங்கள் இடிந்து விழுந்தது, மின் இணைப்புகள் மற்றும் மொபைல் கோபுரங்கள் கடுமையாக சேதமடைந்தன.

மாவட்டம் முழுவதும் தொடர் கனமழையால் திடீர் வெள்ளம் ஏற்பட்டதை அடுத்து, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வரை 3,500இற்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ந)

ல்
ப்

ள்ள
பதி
தெரி

அமெ
கை
லை
வீதம்
ன்று

ற்று

டயே
லும்,
திக

டம்
ான
அந்த
ால்,

அது சீனாவையே அழித்துவிடும். ஆனால், நான் அந்த அஸ்திரங்களை உபயோகிக்கப் போவதில்லை.

அரிய வகை காந்தங்களை அமெரிக்காவுக்கு சீனா வழங்க வேண்டும் அவர்கள் அவ்வாறு வழங்கவில்லை என்றால், நாம் அவர்களிடம் 200 சதவீதம் வரி அல்லது அதற்கு ஈடாக எதையாவது வசூலிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இரு தரப்பினரும் வரி விதிப்புகளை அதிகரிப்பதை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தாலும், அரிய வகை கனிமங்கள் குறித்த சர்ச்சையால் பதற்றம் நீடிக்கிறது. (ந)



## எம்.பி.க்களின் சம்பளத்தை குறைக்க கோரி இந்தோனேசிய பாராளுமன்றம் முற்றுகை




(ஜகர்த்தா)

இந்தோனேசியாவில் உள்ள எம்.பி.க்களுக்கு சுமார் ரூ.5 லட்சம் மாத சம்பளமாக வழங்கப்படுகிறது.

இது அந்த நாட்டின் சராசரி வருமானமான ரூ.17 ஆயிரத்தை விட பல மடங்கு அதிகம் ஆகும்.

இதுதவிர பல்வேறு சலுகைகளும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

எனவே பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு அவர்களது சம்பளத்தைக் குறைக்கக் கோரி பொதுமக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

இந்நிலையில், பாராளுமன்றத்தை முற்றுகையிட்ட அவர்கள் அங்கு நின்று கொண்டிருந்த வாகனங்களை தீ வைத்து கொளுத்தினர்.

இதனால் போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்தது.

எனவே போராட்டத்தை ஒடுக்க கண்ணீர் புகைக்குண்டு வீசி பொதுமக்களை போலீசார் அங்கிருந்து விரட்டினர்.

இதனையடுத்து பாராளுமன்றத்தை சுற்றியுள்ள பகுதியில் ஆயிரக்கணக்கான பொலிஸார் நிறுத்தப்பட்டுள்ளனர். (ந)

## 103 விமானங்கள் வாங்குகிறது தென்கொரியா




(சியோல்)

தென்கொரியாவைச் சேர்ந்த "கொரியன் ஏர்" விமான நிறுவனம், 103 விமானங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தத்தை, "போயிங்" நிறுவனத்துடன் செய்துள்ளது.

[illegible] தென்கொரியாவின் கொரியன் ஏர் நிறுவனம், தன் விமானங்களை நவீனமயமாக்கவும், வளர்ச்சியை மேம்படுத்தவும், அமெரிக்காவைச் சேர்ந்த போயிங் விமான நிறுவனத்துடன் 4.35 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில், 103 விமானங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் வாங்குவதற்காக ஒப்பந்தம் செய்துள்ளது.

கொரியன் ஏர் நிறுவனத்தின் வரலாற்றில், ஒரே நேரத்தில் வாங்கப்படும் மிகப்பெரிய ஆர்டர் இதுவாகும். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை ஒருபோதும் விட்டுக்கொடுக்க முடியாது!

## விஜயின் கருத்துக்கு விஜிதஹேரத் பதிலடி

**(கொழும்பு) ................ கச்சதீவை ஒருபோதும் இந்தியாவுக்கு விட்டுக்கொடுக்க மாட்டோம் என வெளிவிவகார அமைச்சர் விஜிதஹேரத் தெரிவித்தார்.**

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகச் சந்திப்பில் கருத்துரைக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

"கச்சதீவை மீட்டு தமிழக கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு பிரதமர் மோடி தீர்வை வழங்க வேண்டும்" என, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர், நடிகர் விஜய் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் விஜித ஹேரத் பதில் அளித்தார்.

தற்போது தென்னிந்தியாவில் தேர்தல்காலம் ஏற்பட்டுள்ளதால், தமது அரசியல் தேவைகளுக்காக ஒவ்வொருவரும் வெவ்வேறு கருத்துக்களை கூறிவருவதாக அவர் கூறினார்.

அவ்வாறான அரசியல் கருத்துக்களை பொருட்படுத்த வேண்டிய தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1990- இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி-பா-10 1/2<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L,SHOP (OWN)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15992 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி-பா- 16 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: G/15998 |
| பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>2இல்செவ்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்-O/L, Painter<br>எதிர்பார்ப்பு:தகுதியான பெண்<br>தொ.இ: B/15993 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்-சதயம்<br>7இல்செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSC,MSC, Engineer<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16000 |
| பிறப்பு:1996-இந்து<br>நட்சத்திரம்:ரோகினி<br>2இல்செவ்<br>கி-பா- 6 1/4<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:Master Degree, Team Leaer(UK)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு(PR உள்ளவர்)<br>தொ.இ: B/15995 | பிறப்பு-1990-இந்து<br>நட்சத்திரம்-ரோகினி<br>கி-பா-17<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:Diploma,Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15664 |
| பிறப்பு: 1980- இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி-பா-42 1/2<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்-BFA,Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15996 | பிறப்பு-1989-RC<br>நட்சத்திரம்-மிருகசீரிடம்<br>கி-பா-65<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L. Cleark<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15679 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம்-மிருகசீரிடம்<br>உயரம்:5'9"<br>தகைமை/தொழில்: Bsc,Msc,work (Australia)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: B/15999 | பிறப்பு-1993-RC<br>நட்சத்திரம்-உத்தரம்<br>உயரம்-5'3"<br>தகைமை/தொழில்: BFA, DO<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15669 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 435



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இது ஒரு பிரச்சினை!

ஒருவர் இருந்தார். வயது 50! பெரியவர்! அவருக்கு வாழ்க்கையிலே எந்த குறையும் இல்லை. சின்ன வயதிலே படிப்பு நன்றாக வந்தது படித்தார். வசதியான குடும்பம் அதனாலே பணத்துக்கும் கஷ்டம் இல்லை! படித்து முடிந்ததும் கல்யாணம். மனதுக்குப் பிடித்த மனைவி தொல்லையில்லாத குடும்ப வாழ்க்கை.

அவர்களுக்கு ஒரு பெண் பிள்ளை பிறந்தது. வளர்ந்தது. அதையும் நல்லபடியாக ஒரு இடத்திலே கல்யாணம் செய்து கொடுத்தார்!

பெண் புகுந்த இடமும் வசதியான இடம் அங்கே உள்ள மாமனார் மாமியார் உட்பட எல்லோருக்குமே நல்ல குணம்!

நம் பெரியவர் ஒரு தனியார் கம்பெனியிலே நல்ல உத்தியோகத்திலே இருக்கிறார். கூட வேலை பார்கின்றவர்களும் ரொம்ப நல்ல மாதிரி!

இப்போதும் தன் மனைவியை அழைத்துக்கொண்டு அடிக்கடி உல்லாசப் பிரயாணமெல்லாம் போய்விட்டு வருகிறார்.

எல்லா வசதிகளோடும் இருக்கிறார். எந்தச் சிக்கலும் இல்லை! இவருடைய வாழ்க்கையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இதுமாதிரி எல்லாம் அமைந்துவிட்டால் நானும் ரொம்ப நிம்மதியாகத்தான் இருப்பேன் என்று சொல்லுவீர்கள்!

ஆனால் அந்தப் பெரியவர் நிம்மதியாக இருக்கிறார் என்றா நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை!

அவர் என்ன சொல்றார் தெரியுமா?

"வாழ்க்கையிலே நான் நினைத்தது எல்லாமே கிடைத்துவிட்டது. எதற்காகவும் நான் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பது உண்மை.

ஆனால் எப்போது பார்த்தாலும் எனக்குள்ளே ஒரு சோகம். ஏதோ ஒரு சோகம். இருந்து கொண்டே இருக்கிறது. அது ஏன் என்று புரியவில்லை!" என்கிறார்.

இதே நிலைமை நம்மிலும் சில பேருக்கு இருக்கலாம் சந்தோஷமாக இருக்க முடியவில்லை!" என்ற நிலைமை.

இது ஒரு மனோதத்துவக் கோளாறு.

Achievement Depression என்று பெயர்! ஆசைப்பட்ட எல்லாமே கிடைத்துவிட்டது என்று வையுங்கள் அதன்பிறகு எதற்கு வாழ வேண்டும்? என்று தோன்றும்.

வாழ்க்கையிலே பிரச்சினைகளே இல்லை என்று வையுங்கள். அதுவே ஒரு பிரச்சினை! அதுதான் இது! அதாவது பிரச்சினையே இல்லாமல் இருக்கின்ற பிரச்சினை.

சோகமோ, மகிழ்ச்சியோ எதுவாக இருந்ததாலும் அடுத்தபடியாக ஒரு விடயம் இருக்கிறது அதை கவனிக்கவும் என்று தொடர்ந்து திட்டம் போடுவதிலேயும் அதற்காக செயற்படுவதிலேயும் வாழ்க்கைச் சக்கரம் ஓடுகின்றது. அடுத்தபடியாக செய்வதற்கு எதுவும் இல்லை என்னும் போது அந்த சக்கரம் நிற்கிறது! இனிமேல் ஏன் ஓட வேண்டும் என்ற கேள்வி வருகிறது! இது நியாயம்தான்.

இருந்தாலும் வாழ்க்கை என்பது இன்னமும் இருக்கிறது என்று வலியப்போய் சில விடயங்களை நாம் எடுத்துக்கொண்டோம் என்றால் "இனிமே ஏன் ஓடவேண்டும்" என்ற கேள்வி அர்த்தமற்றதாக ஆகிவிடும்! அதனாலே எல்லாம் பார்த்துவிட்டோம் இனிமேல் என்ன இருக்கிறது வாழ்க்கையிலே என்று நினைத்து நீங்களாக ஒரு முடிவுக்கு வந்து விடாதீர்கள்!

இந்த உலகத்திலே எத்தனையோ இருக்கிறது - நமக்குத்தான் பிரச்சினை இல்லை என்றால் அடுத்தவர்களுக்கு ஏதாவது இருக்கும். அதை தீர்ப்பதற்கு உதவலாம். அனாதை இல்லங்கள் இருக்கிறது. அதற்கு உதவலாம். இப்படி ஏதாவது சமூக சேவைக்கு என்று திட்டம் போட்டுக்கொண்டு நாளை என்ன வேலை என்று யோசிக்க ஆரம்பியுங்கள். உங்களுக்குள்ளே அர்த்தம் இல்லாமல் உட்கார்ந்திருந்தால் சோகம் எழுந்து ஓடிப்போய்விடும்.

இதுவரைக்கும் சொல்லிக்கொண்டு வந்ததெல்லாம் பிரச்சினையே இல்லை என்கிறது பிரச்சினை உள்ளவர்களுக்கு! இப்படி உள்ளவர்கள் ரொம்ப அபூர்வம். பிரச்சினைகளிலிருந்து தப்பிப்பதற்கு வழி சொல்லுங்கள் என்று கேட்கிறவர்கள்தான் அதிகம்! ஒருவர் வந்தார். இன்னொருவரைப் பார்த்தார்.

"சார்... எனக்குக் கடுமையான பணப் பிரச்சினை. ஒரு நூறு ரூபா இருந்தால் கொடுங்கள்!" என்றார்.

"நீ யார் என்றே எனக்குத் தெரியாது! உனக்குத் தெரிந்தவர்கள் யாரையாவது பார்த்துக் கேள்... கொடுப்பார்கள்!" - என்றார் அவர்! அதற்கு இவர் "அவர்களிடமெல்லாம் ஏற்கனவே வாங்கிவிட்டேன். அதனாலேதான் உங்களிடம் வந்தேன்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு படுகொலை 35 ஆவது ஆண்டு நினைவுநாள்




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை தொடக்கம் மண்டைதீவு வரை படுகொலை செய்யப்பட்டவர்களின் 35 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது. முன்னதாக ஊர்காவற்றுறை பகுதியில் மாலை ஆரம்பமான நிகழ்வுகளை தொடர்ந்து அராலி சந்தி , மணக்கும்பான் பிள்ளையார் கோவிலடி ஆகிய இடங்களில் நிகழ்வுகள் இடம்பெற்று இரவு மண்டைதீவில் பிரதான நிகழ்வுகள் இடம்பெற்றன.

மண்டைதீவுப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டவர்களை மண்டைதீவு முதலாம் வட்டாரம் பகுதியில் உள்ள கிணறொன்றில் போடப்பட்டதாக கூறப்படும் பகுதியில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மூடப்பட்ட கிணற்றுக்கு முன்பாக பிரதான தீபம் ஏற்றப்பட்டதை தொடர்ந்து கிணற்றைச் சுற்றி தீபங்கள் ஏற்றப்பட்டு , மூடப்பட்ட கிணற்றின் மேல் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டவர்களில் இருவரின் உருவப் படங்கள் அவ்விடத்தில் வைக்கப்பட்டு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-33-104)

## வலி வடக்கு பிரதேச சபையில்
# தமிழ் மக்கள் நலன் சார்ந்த தீர்மானங்கள் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இம் அமர்வில் நீண்டகால நாட்களாக சிறையிலே வாடும் தமிழ் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பின் அடிப்படையில் ஜனாதிபதி பொதுமன்னிப்பு அளித்து விடுதலை செய்ய வேண்டும். யாழ்ப்பாணம் செம்மணி புதைகுழி விவகாரத்தில் இதுவரை 100 இற்கும் மேற்பட்ட மனித எலும்புக் கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

இந்த தமிழினப் படுகொலைகளுக்கான நீதி விசாரணைகளைக் கோரி ஐக்கிய நாடுகள் ஆணையாளர் சர்வதேச நீதி விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையினை தமிழ் மக்கள் கூட்டணியின் வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர் பெ.தனராஜாவினால் பிரேரணையாக முன்மொழியப்பட்டது.

குறித்த பிரேரணைகள் அனைத்துக் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வலி வடக்கு பிரதேச சபையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (8)

# வட மாகாண கடற்படைத் தளபதி அரசாங்க அதிபர் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

வட மாகாண கடற்படைத் தளபதியாக புதிதாக பொறுப்பேற்ற ரியர் அட்மிரல் புடிக்ஹ லியனகமகே யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனை நேற்று முன்தினம் பி. ப 4.30 மணிக்கு மரியாதை நிமித்தம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பில் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) பா.ஜெயகரன், பிரதம கணக்காளர் எஸ் கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் மற்றும் உதவி மாவட்டச் செயலாளர் செல்வி உ.தர்சினி ஆகியோரும் உடனிருந்தார்கள். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 300 | 350 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 170 | 220 |
| பச்சைமிளகாய் | 100 | 220 | 200 | 140 | 200 |
| தக்காளி | 300 | 300 | 300 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 260 | 350 | 230 | 300 |
| கரட் | 400 | 430 | 500 | 400 | 500 |
| பூசணி | 100 | 100 | 80 | 60 | 100 |
| புடோல் | 150 | 100 | 100 | 80 | 200 |
| வாழைக்காய் | 150 | 150 | 120 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 300 | 230 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 150 | 120 | 200 |
| பாகற்காய் | 350 | 400 | 400 | 300 | 400 |
| வெண்டக்காய் | 200 | 130 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 300 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 250 | 300 | 250 | 400 | 300 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 180 | 300 |
| பீற்றூட் | 100 | 100 | 250 | 100 | 200 |
| கறிமிளகாய் | 400 | 400 | 400 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 400 | 180 | 300 |
| போஞ்சி | 600 | 600 | 600 | 450 | 700 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 150 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 120 | 40-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 300 | 200 | 400 | 300-400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 160 | 180 | 150 | 120-180 | 150-200 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 450 | 900 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 150 | 250 | 300 |
| முள்ளங்கி | 100 | 160 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 180 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 50 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 80 | 200 |

# இராசிபலன்

28.08.2025
ஆவணி 12, வியாழக்கிழமை
பஞ்சமி பிற்பகல் 5.26 மணிவரை

சித்திரை முற்பகல் 9.18 மணிவரை
சுப நேரம் 7.35-9.05 மணிவரை
இராகுகாலம் 1.35-3.05 மணிவரை

சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்: உத்திரட்டாதி

வளவன்




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், உடல் நலன் சீராகும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு.




கற்பனை மிகுதியான நாள், செய்தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.




சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.




குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.




குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.




நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.




செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சுப முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வருமானங்கள் திருப்தி தரும்.




திடீர் செலவுகள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும், தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**கண்களால் கற்றுக் கொள்வதை விட காதுகளால் கற்பதே அதிகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 854





"ஆம் அதனால் வழியில் தடங்கல் ஏற்பட்டது. எனக்குக் கூடக் கவலையாகத்தானிருந்தது. நேற்று நள்ளிரவு நேரத்துக்குப் பல்லக்கு வந்த பிறகுதான் நிம்மதியாயிற்று."

"ஓகோ! நள்ளிரவு ஆகிவிட்டதா? தாங்களும் அத்தனை நேரமும் விழித்திருந்து வரவேற்பு அளித்தீர்களா?"

"விழித்திருந்தேன் ஆனால் வரவேற்பதற்கு நான் போகவில்லை. வீட்டுப் பெண்களைவிட்டே வரவேற்கச் செய்தேன். வெறி பிடித்தவளாயிற்றே என்ன தகராறு செய்கிறாளோ என்று கவலையாகத்தானிருந்தது. நல்ல வேளையாக, அப்படி ஒன்றும் நடக்கவில்லை. நன்றாகச் சாப்பிட்டு விட்டு, உடனே உறங்கி விட்டாள். திருமலை! உண்மையைச் சொல்லப் போனால், இன்னமும் அவளைப் பார்க்கும் விடயத்தில் எனக்குக் கொஞ்சம் பயமாய்த்தானிருக்கிறது. நீ இச்சமயம் வந்தது நல்லதாய்ப் போயிற்று."

"குருவே! நானும் அந்தப் பெண்மணியைப் பார்ப்பதற்கு மிக்க ஆவலாயிருக்கிறேன்"

"அப்படியானால், வா! அந்தப்புரத்துக்குப் போகலாம். உன்னை ஏற்கனவே அவளுக்குத் தெரியும் அல்லவா? நீ சின்ன இளவரசருக்கு வேண்டியவன் என்பதும் தெரியும். ஆகையால் உன்னிடமும் சிறிது சுகமாக இருக்கக் கூடும்."

குருவும், சீடனும் மாளிகையின் பின் கட்டுக்குச் சென்றார்கள். தாதிமார்களிடம் நேற்றிரவு வந்த பெண் மணியை அழைத்து வரும்படி அநிருத்தப்பிரம்மராயர் கட்டளை இட்டார்.

தாதிமார்கள் அந்த ஸ்திரீயை அழைத்துக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அநிருத்தர் அவளைப் பார்த்துத் திகைத்துப் போய் நின்றார். ஆழ்வார்க்கடியானின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

## அத்தியாயம் 23
## ஊமையும் பேசுமோ?

அநிருத்தர் சற்று நேரம் பூங்குழலியை உற்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அவளைக் கொண்டு வந்த தாதிமார்களை அருகில் அழைத்தார். அவர்களிடம் மெல்லிய குரலில் ஏதோ கேட்டார். அவர்கள் மறுமொழி சொன்ன பிறகு அந்த அறையை விட்டு அப்பால் போகச் செய்தார்.

ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "திருமலை! ஏதோ தவறு நேர்ந்திருப்பதாகத் தோன்றுகிறது!" என்றார்.

"ஆம், ஐயா! அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது." "இவள் இளம் பெண் சுமார் இருபது பிராயந்தான் இருக்கலாம்."

"அவ்வளவு கூட இராது". "நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மாதரசிக்குப் பிராயம் நாற்பது இருக்க வேண்டும்." "அதற்கு மேலேயும் இருக்கும்"


"ஆம், ஆம், நீ இலங்கைத் தீவில் மந்தாகினி தேவியைப் பார்த்திருக்கிறாய் அல்லவா?" "ஆம் ஐயா! பார்த்து, தங்கள் கட்டளைப்படி இங்கு அழைத்து வரவும் முயன்றேன், முடியவில்லை."

"இந்தப் பெண் மந்தாகினி தேவி அல்லவே?" "இல்லை, குருதேவரே! நிச்சயமாக அந்த அம்மையார் இல்லை!" "அப்படியானால் இவள் யாராயிருக்கும்? எப்படி இங்கு வந்து சேர்ந்தாள்?"

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## திருட்டுப் பட்டம்



எல்லா வற்றையும் கேட்டு கொண்டிருந்த பொலீஸ் ஆபிசர் நாளை அவனை பள்ளிக்கு கிளம்ப தயாராய் இருக்க சொல்லுங்கள் என்றார். நன்றி சொல்லிவிட்டு சாமிநாதனின் அப்பா வீடு வந்து அவனிடன் விடயத்தை சொன்னார்.

ஆண்டு விழா ஆரம்பமாக போகிறது, தலைமை ஆசிரிய ரும் மற்ற ஆசிரியர்களும் பொலிஸ் அதிகாரிக்கு காத்திருந்தார்கள். பொலிஸ் அதிகாரியின் கார் பள்ளி வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து பொலிஸ் அதிகாரி இறங்கினார் தலைமை ஆசிரியரும் மற்ற ஆசிரியர்களும் அவரை மாலை போட்டு வரவேற்றனர். அவர்கள் மரியாதையை ஏற்றுக்கொண்ட அதிகாரி காருக்குள் தலையை நுழைத்து பயப்படாமல் இறங்கி வா என்று சொல்ல சாமிநாதன் பயத்துடன் மெல்ல கீழிறங்கினான். தலைமை ஆசிரியருக்கும், மற்ற ஆசிரியர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. போய் மாணவர்களுடன் உட்கார் என்று அவனை அனுப்பிவிட்டு வாருங்கள் என்று அனைவரையும் மேடைக்கு அழைத்து சென்றார்.

ஆசிரியர்களின் வரவேற்புரை, மற்றும் தலைமை ஆசிரியரின் உரை, முடிந்தவுடன் பொலிஸ் அதிகாரி எழுந்து மாணவ, மாணவிகளின் சுய ஒழுக்கம், கல்வி, கட்டுப்பாடு ஆகியவைகளைப்பற்றி பேசி முடித்தவுடன்.

நான் உங்களுக்கு ஒரு விடயம் சொல்ல நினைக்கிறேன் இங்கு படிக்கும் என் பையன் ராம் பிரசாத்தின் புத்தகப்பையிலிருந்து பணம் காணாமல் போய் விட்டதாகவும், அதனால் அவனுக்கு அருகில் உட்கார்ந்திருந்த சாமிநாதன் என்னும் பையன் மேல் திருட்டுப்பட்டம் விழுந்து விட்டது என்றும் கேள்விப்பட்டேன். நான் முதலில் ஒன்றை சொல்ல விரும்புகிறேன், சாமிநாதன் இந்த பணத்தை எடுக்கவில்லை, ஏனென்றால் அந்தப் பணத்தை எடுத்தது நான்தான். மேடையில் இருந்த ஆசிரியர்களும், மாணவ மணிகளும் திகைத்து விட்டனர். ராம் பிரசாத் சில நாட்களாக நிறைய செலவு செய்வதாக தெரிந்து கொண்டேன். அவன் அம்மாவிடம் செலவுக்கு பணம் பெற்று புத்தகப்பையில் வைப்பதையும் தெரிந்து கொண்டு அந்த பணத்தை எடுத்து வைத்து விட்டேன்.

நான் பணம் எடுத்ததை அவன் அம்மாவிடம் சொல்லியிருக்க வேண்டும். வேலைப் பளுவால் மறந்துவிட்டேன். சாமிநாதனின் பெற்றோரிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். நடந்ததை மறந்து சாமிநாதனும் ராம்பிரசாத்தும் நண்பர்களாக இருப்பார்கள் என நம்புகிறேன். அனைவருக்கும் வாழ்த்துக்கள் என்று சொல்லி முடிக்கவும் மாணவ மாணவிகளின் கைதட்டல் ஒங்கி ஒலித்தது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பணிவுடன் கூடிய திறமையே மனித குலத்திற்கு உண்மையில் பயனுள்ளது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒளியைக்கண்டு பயம் கொள்ளும் நமது அரசியல் தலைவர்கள்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. அவரின் உடல் நிலை காரணமாக அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கையைப் பரிசீலித்த நீதிமன்றம் அவருக்குப் பிணை அனுமதி வழங்கியுள்ளது.

இங்கு பிணை வழங்கப்பட்டாலும் அரச சொத்தை துஷ்பிரயோகம் செய்த வழக்குத் தொடரும்.

அதேவேளை அரச சொத்தை சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தியதன் காரணமாக, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார் என்ற வரலாறு இவ்வுலகம் இருக்கும்வரை பேசப்படும் என்பதுதான் இங்கு முக்கியமான விடயம்.

இதற்கும் அப்பால், அரச சொத்தை சொந்தத் தேவைக்குப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதியைக் கூட கைது செய்து விளக்கமறியலில் வைக்கும்போது, நாம் எந்த மாட்டு என்ற நினைப்பில் அனைத்து அரச அதிகாரிகள் முதல் சாதாரண தொழிலாளர்கள் வரையில் ஒரு பெரும் எச்சரிக்கையை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

இதுஒருபுறமிருக்க, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுத்ததை சிலர் மறைமுகமாகக் கழ்ந்து கொண்டனர்.

உண்மையில் நீதிமன்றத்தின் தீர்ப்பை விமர்சிப்பதென்பது நீதிமன்ற அவமதிப்புக்குரியது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆம், சட்டங்களை அவமதிப்புச் செய்து விட்டு, பின்னர் குற்றங்களை அரசு மீது சுமத்துவதென்பது அர்த்தமற்றது.

ஆகையால் நீதிமன்றத்தினூடாக அணுகப்படுகின்ற விவகாரங்களை நீதிமன்றத்தினூடு கையாள்வதுதான் பொருத்தமானது.

இதைவிடுத்து, முன்னாள் ஜனாதிபதியை இவ்வாறு விளக்கமறியலில் வைக்கக்கூடாது என்று யார் கூறினாலும் அதுமிகப்பெரும் தவறாகும்.

நிலைமை இதுவாக இருக்கையில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிணை வழங்க மறுத்த போது முன்னாள் ஜனாதிபதிகள் கங்கணம் கட்டி நின்றனர்.

இதைப் பார்த்தபோது, இரண்டு உண்மைகள் வெளிப்படுவது தெரிகிறது.

அதில் ஒன்று பிரஸ்தாப முன்னாள் ஜனாதிபதிகளின் நெஞ்சம் குறுகுறுக்கிறது.

இரண்டாவது இவர்கள் தங்களின் ஆட்சிக் காலத்தில் சட்டம், நீதி நிலைநிறுத்தப்படுவதற்கு எந்தவகையிலும் ஒத்துழைப்பு வழங்கியிருக்கமாட்டார்கள். இதுவே அந்த இரண்டு உண்மைகளுமாகும்.

ஆக, இருளைக் கண்டு பயம் கொள்கின்ற சூழ்நிலை மாறி, இப்போது இவர்கள் ஒளியைக் கண்டு பயம் கொள்கின்றனர்.

இதுதான் எங்கள் நாட்டில் இருக்கக்கூடிய பிரமாதம்.

# சட்டவிரோத மீன்பிடியைத் தடுக்க அரசாங்கம் விசேட திட்டம்

(கொழும்பு)

சட்ட விரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தப்படாத மீன்பிடியைத் தடுத்தல், ஊக்குவிக்காதிருத்தல் மற்றும் இல்லாதொழிப்பதற்கான வங்காள விரிகுடா பிராந்திய செயற்பாட்டுத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அழிந்துவரும் மீன் வளங்களை மீள்நிலைக்குக் கொண்டு வரல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் சட்ட விரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்கு முறைப்படுத்தப்படாத மீன் பிடியைத் தடுத்தல், ஊக்குவிக்காதிருத்தல் மற்றும் இல்லாதொழிப்பதற்கான சர்வதேச செயற்பாட்டுத்திட்டம் உணவு மற்றும் விவசாய அமைப்பின் உறுப்பு நாடுகளால் 2001ஆம் ஆண்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன் பெறுபேறாக இலங்கையும் அதற்காக தேசிய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. அத்துடன் பிராந்திய சட்டவிரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன்பிடி தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வங்காள விரிகுடா வேலைத்திட்டம் நாடுகளுக்கிடையிலான சர்வதேச அமைப்பின் அங்கத்துவ நாடுகள் கூட்டான பிராந்திய செயற்பாட்டுத் திட்டத்தில் கையொப்பமிடுவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளன.

இத் திட்டத்தின் மூலம் பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்குரிய தனித்துவமான பொருளாதார வலயங்களைப் போலவே, எங்களுக்கு கடல் மற்றும் சமுத்திரங்களுக்கு தேசிய நீதிமன்ற அதிகாரத்திற்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் சட்ட விரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன் பிடியைத் தடுத்தல், ஊக்குவிக்காதிருத்தல் மற்றும் இல்லாதொழிப்பதைப் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதற்கமைய குறித்த பிராந்திய செயற்பாட்டுத் திட்டத்தில் கையொப்பமிடுவதற்காக கடற்தொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7)

## ரணிலின் உடல் நிலை குறித்து பகிரங்கப்படுத்தியது குற்றம்

### ருஷான் பெல்லனவுக்கு எதிராக விசாரணை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நிலை தொடர்பான தகவல்களை ஊடகங்களுக்கு வெளியிட்டமைகாக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் ருக்ஷான் பெல்லனவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பிரதி சுகாதார அமைச்சர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், நோயாளிகளின் உடல் நிலைமை மற்றும் அவற்றுடன் தொடர்புடைய தகவல்களைப் பொதுவாக ஊடகங்களுக்கு வழங்குவதில்லை அவ்வாறு செயற்படுவதில் ஒழுக்கம் மற்றும் சட்ட ரீதியான சிக்கல்கள் காணப்படுகின்றன.

ரணிலின் உடல் நிலை குறித்த தகவல்களைப் பகிரங்கப்படுத்தியமை ஏற்றுக் கொள்ள முடியாது அது ஒழுக்க விதிமுறைகளை மீறும் செயற்பாடு இது குறித்து விசாரணை நடத்தப்படும் என்றார். (ம-7)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தவரின் சடலத்தை பொறுப்பேற்குமாறு அறிவுறுத்தல்

கடந்த பெப்ரவரி மாதம் நடராஜா (வயது - 71) என்ற முதியவர் சுயநினைவற்று வீதியில் மயங்கிக் கிடந்த நிலையில் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படிருந்தார். குறித்த நபர் கடந்த 15.02. 2025 இல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவரது சடலத்துக்கு எவரும் உரிமை கோராத நிலையில் சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த நபருக்கு உறவினர்கள் இருப்பின் வைத்தியசாலை நிர்வாகத்தை உடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

மன்னார் பொலிஸ் பிரிவிலிருந்து கடந்த 24.07.2025 அன்று அனுமதிக்கப்பட்ட ஆணொருவர் அன்றைய தினமே சிகிச்சை பலனின்றி உயிரிழந்த நிலையில் இறந்தவரது சடலத்தை இதுவரை எவரும் அடையாளம் காட்டாத நிலையில்யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரின் உறவினர்கள் இருப்பின் நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ம-7)

## யாழ்.போதனாவிலிருந்து கைதி தப்பியோட்டம்

### பொலிஸ் சார்ஜன்ட் பணியிடை நீக்கம்

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த கைதியொருவர் தப்பியோடிய சம்பவம் தொடர்பில்அன்னாரது பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் தர உத்தியோகஸ்தர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற திருட்டு சம்பவம் தொடர்பில்25ஆம் திகதி கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர் சுகவீனமடைந்தமையால் பொலிஸ் பாதுகாப்புடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் இருந்து தப்பியோடியுள்ளார்.

அதனை அடுத்து சம்பவம் தொடர்பில் பொலிஸார் மல்லாகம் நீதவான் நீதிமன்றுக்கு அறிவித்து நீதிமன்றினால் சந்தேக நபருக்கு எதிராக திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் பொலிஸ் பாதுகாப்பிலிருந்த கைதி தப்பியோடியமை தொடர்பில் பொலிஸார் உள்ளக விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

அதன் பிரகாரம் சந்தேகநபர் தப்பிச் சென்ற தினத்தில் சந்தேக நபரின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜண்ட் ஒருவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## திருத்தப்பணிகள் நிமித்தம் அமுலாகும் வீதித் தடைகள்

### யாழ்.மாநகர சபை அறிவிப்பு

யாழ்ப்பாண மாநகர சபையினால் வீதிப்புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதன் ஓரங்கமாக பின்வரும் வீதிகளில் குறிப்பிட்ட பகுதிகளினூடான போக்குவரத்து தடைப்படும் என யாழ். மாநகரசபை அறிவித்துள்ளது.

அதன் பிரகாரம்

1.இடுகாடு வீதி புனரமைப்பு (யாழ். பிரதம தபாலகச் சந்தியிலிருந்து தொலைத் தொடர்பு நிலையச் சந்தி வரை)

2. மூத்த விநாயகர் வீதித் திருத்தமும், முடிவுப் பகுதியில் உள்ள பாலம் திருத்தமும் (மூத்த விநாயகர் கோவில் வீதியும் ஆசீர்வாதப்பர் வீதியும் இணையும் சந்தி)

3. முருகமூர்த்தி பெரிய தம்பிரான் இணைப்புப் பாலம் கட்டுமானம் (முருகமூர்த்தி வீதி பெரிய தம்பிரான் வீதி சந்தி)

ஆகிய பகுதிகளில் இன்றுமுதல் எதிர்வரும் 19.11.2025ஆம் திகதி வரை புனரமைப்புப் பணிகளுக்கான வீதித்தடை ஏற்படுத்தப்படவுள்ளது.

எனவே அவ்வீதிகளைப் பயன்படுத்துவோர் போக்குவரத்தினைச் சிரமமின்றி மேற்கொள்ளும் பொருட்டு மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்துமாறு மாநகரசபை அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுகிறார் அஸ்வின்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரும், தமிழக வீரருமான ரவிச்சந்திரன் அஸ்வின், ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

ஏற்கனவே சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றிருந்த நிலையில், இந்த அறிவிப்பு அவரது ரசிகர்களுக்கு அதிர்ச்சியையும் வருத்தத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற அஸ்வின், ஐ.பி.எல் மற்றும் உள்நாட்டுப் போட்டிகளில் தொடர்ந்து விளையாடுவார் என்று ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

ஆனால், தற்போது ஐ.பி.எல் போட்டிகளிலிருந்து மட்டுமல்லாமல், அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் விலகுவதாக அவர் அறிவித்துள்ளார்.

இது குறித்து தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவிட்டுள்ள அஸ்வின், "ஒவ்வொரு முடிவுக்கும் ஒரு புதிய ஆரம்பம் இருக்கும் என்பார்கள். ஐ.பி.எல் கிரிக்கெட் வீரராக எனது காலம் இன்றுடன் முடிவடைகிறது. ஆனால், உலகம் முழுவதும் உள்ள பல்வேறு லீக் போட்டிகளில் விளையாடும் எனது காலம் இன்று தொடங்குகிறது" என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தன்னுடன் பணி யாற்றிய அனைத்து அணிகளுக்கும், ரசிகர்களுக்கும், ஐ.பி.எல் மற்றும் பி.சி.சி.ஐ இற்கும் தனது நன்றியைத் தெரிவித்துள்ளார்

அஸ்வின் ஐ.பி.எல் வரலாற்றில் சென்னை சூப்பர் கிங்ஸ், ரைசிங் புனே சூப்பர் ஜெயண்ட், கிங்ஸ் லெவன் பஞ்சாப், டெல்லி கேப்பிட்டல்ஸ் மற்றும் ராஜஸ்தான் ரோயல்ஸ் என பல்வேறு அணிகளுக்காக விளையாடியுள்ளார்.

தனது ஐ.பி.எல் பயணத்தில், 200 இற்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்தி அதிக விக்கெட்டுகள் எடுத்த பந்து வீச்சாளர்கள் பட்டியலில் அஸ்வின் இடம் பிடித்துள்ளார். (நி)

# உயரம் பாய்தலில் தங்கம் வென்ற உடுவில் மகளிர் கல்லூரி மாணவி



வடமாகாண மெய்வல்லுநர் போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவி குகராஜ் சங்கவி 16 வயதுப்பிரிவு உயரம் பாய்தலில் 1.46M உயரம் பாய்ந்து முதலிடத்தை தனதாக்கி கொண்டார். (நி)

## யாராக ...

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் பாரபட்சமின்றி அனைவருக்கும் சமமாக சட்டம் பிரயோகிக்கப்படுகிறது.

முறையான முறைப்பாட்டின் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக விசாரணைகள் இடம் பெறுகின்றன.

பொதுச் சொத்துக்களைத் தவறாக பயன்படுத்துபவர்கள் யாராக இருந்தாலும் தகுதி, தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. இதனிடையே ரணில் விக்கிரமசிங்கவை விடுவிக்குமாறு அரசாங்கத்துக்கு எந்தவித இராஜதந்திர அழுத்தமும் கொடுக்கப்படவில்லை.

வெளிநாடுகளில் இருந்து கருத்துத் தெரிவித்த இருவரும் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் அல்ல. அதில் ஒருவர் இதேபோன்ற குற்றச்சாட்டுக்களை உடையவராவார்.

எனவே இலங்கைக்கான உயர்ஸ்தானிகரோ, தூதுவரோ இதுவரையில் அவ்வாறான கருத்துக்களைத் தெரிவிக்கவில்லை.

இதனூடாக இலங்கையில் சட்டம் அனைவருக்கும் சமமான வகையில் பிரயோகிக்கப்படுகிறது என்பதை சர்வதேசம் ஏற்றுக்கொண்டு அங்கீகரித்துள்ளது என்பதனை உணர முடிகிறது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணத்தையும் தற்போதைய ஜனாதிபதியின் உள்நாட்டு பயணங்களையும் ஒப்பிட முடியாது.

இலங்கைக்குள் மரண வீடுகளுக்குச் செல்வது அல்லது நாட்டில் ஏதேனும் ஒரு இடத்திற்குச் செல்வதையும் தனியான விமானத்தை ஒதுக்கிப் பயணம் செய்வதையும் ஒப்பிட முடியாது எனவும் அவ்வாறு ஒப்பிடுவது முற்றிலும் தவறானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் அரச ஊழியர்கள் தங்களின் தனிப்பட்ட தேவைகளுக்காக அரச வாகனங்களை பயன்படுத்துவதற்கான வரையறைகளை தொடர்பில் சுற்றறிக்கைகள் ஊடாக உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

எனினும் ரணில் விக்கிரமசிங்கவின் நடவடிக்கையானது பொதுச் சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்தியமையுடன் தொடர்பான பிரச்சினையாகும். அது தொடர்பில் கிடைத்த முறைப்பாடு உரிய சட்ட நடவடிக்கைகளுக்காகக் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

அதற்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

பின்னர் நோய் நிலைமை உள்ளிட்ட காரணங்களை கருத்திற் கொண்டு பிணையில் விடுக்கப்பட்டார்.

இந்த நிலையில் எவருக்கேனும் இந்த விசாரணை மற்றும் கைதுகள் தொடர்பில் குற்றச்சாட்டுகள் இருக்குமாயின் அது தொடர்பில் முறைப்பாடு செய்ய முடியும்.

எனினும் கடந்த காலங்களில் சட்டம் முறையாக அமுல்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்தது.

ஆனால் தற்போது சட்டம் அனைவருக்கும் சமமாக அமுல்படுத்தப்பட்டு பெரும்பான்மையான மக்களின் எதிர்ப்பார்ப்புகள் நிறைவேற்றப்படுகிறது என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-7)

## வவுனியாவில்...

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நீதி வேண்டி வவுனியாவில் நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் தொடர் போராட்டம் மேற்கொண்டு வரும் அவர்கள் 3,111 வது நாளான நேற்றுக் குறித்த ஊர்வலத்தினை ஏற்பாடு செய்திருந்தனர்.

வவுனியா கந்தசாமி கோவிலில் தேங்காய் உடைத்து ஆரம்பமான இந்த ஊர்வலம் மணிக்கூட்டுச் சந்தி வழியாக ஏ9 வீதியை அடைந்து அவர்களுடைய போராட்டக் கொட்டகையை வந்தடைந்திருந்தது.

அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை தாங்கியவாறும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களைத் தாங்கியவாறும் ஊர்வலத்தில் ஈடுபட்ட தாய்மார் அங்கு கோஷங்களை எழுப்பி கண்ணீர்மல்க ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.(ம-7,250)

## வடக்கில்...

வியலாளர் சந்திப்பில் நேற்றுக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை, அம்பாறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் விவசாய நடவடிக்கைக்கான காணிகளை வழங்குவதற்கும் சில பகுதிகளில் குடியேற்றத்துக்கான காணிகளை விடுவிப்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளது.

இதற்காக வனஜீவராசிகள் மற்றும் வனவள திணைக்களம், மகாவலி அதிகாரபை உள்ளிட்ட பல நிறுவனங்களுடன் கலந்துரையாடி, நிரந்தர குடியிருப்பு அமைத்தல், வர்த்தகம் மற்றும் விவசாயம் போன்ற நடவடிக்கைகளுக்கு காணிகளை வழங்கும் நோக்கில் இந்த அமைச்சுக்களுக்கு இடையிலான குழுவொன்றை நியமிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-7)

## உதய ...

ரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நேற்றுக் கொழும்பு கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுரவிடம் தெரிவித்தனர்.

கடந்த 12 ஆம் திகதியன்று ஊடக சந்திப்பொன்றில் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்த கருத்துத் தொடர்பிலான முறைப்பாட்டை தொடர்ந்தே இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

குறித்த ஊடக சந்திப்பில் உதய கம்மன்பில சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை சிதைக்கக்கூடிய கருத்துக்களை தெரிவித்ததாக முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளதாக அதிகாரிகள் மன்றுரைத்தனர்.

இந்தநிலையில் குறித்த கருத்துக்கள் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையின் கீழ் குற்றமாகுமா? என்பதைத் தீர்மானிக்க விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (ம-7)

## பிரச்சினையைத் ...

தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நேற்றுப் புதன்கிழமை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசியல் நோக்கங்களுக்காக எதிர்க்கட்சிகளால் பரந்துபட்ட கூட்டணி அமைக்கப்படவில்லை. நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்குவதற்காகவே நாம் ஒன்றிணைந்துள்ளோம். தற்போதைய அரசாங்கத்துக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கான இயலுமை இல்லை. 40 ஆயிரம் பட்டதாரிகள் வீதியிலிருக்கின்றனர். வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய அவர்களுக்கு தொழில் வழங்கப்படவில்லை என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி மனிதப்...

அநுர குமார திஸாநாயக்க யாழ்ப் பாணத்திற்கு விஜயமொன்றை மேற் கொள்ளவுள்ள நிலையில் செம்மணி மனிதப்புதைகுழியைப்பார்வையிட வாய்ப் புள்ளதாகத் தெரிவித்தார். (ம-7)

## 3 எலும்புக்கூட்...

அகழ்வு நேற்று யாழ்ப்பாணம் நீத வான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னி லையில் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 3 மனித என்புத் தொகுதிகள் கண்டு பிடிக்கப்பட்டன.

அதற்கமைய, இதுவரை 169 மனித என்புக்கூட்டுத் தொகுதிகள் செம்மணி மனிதப்புதைகுழியிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்ட சிறார்களினது என நம்பப்படும் என்புக்கூட்டு தொகுதி கள் உள்ளிட்ட 8 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் நேற்று முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இதுவரையில் 158 மனித என்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (ம-7,33)

## ஜனநாயகம்...

கள் ஓதி வருகின்றன. மைத்திரி, மகிந்த மற்றும் சஜித் தரப்புகள் ஜன நாயகம் பற்றிப் பேசுவது, சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானதாகும்" என கடற்தொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராம லிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் வியாபார இணைப்பு அலகும், முயற்சி யாண்மைக் கற்கைநெறி மாணவர் களும் இணைந்து நடத்திய உலக முயற்சியாளர் தின விழாவும், மாபெ ரும் வர்த்தக சந்தையும் பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

இந்நிகழ்வின் பின்னர் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடு கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"உலக முயற்சியாளர்களை நாம் பாதுகாக்க வேண்டும், அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர் களுக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுக்க வேண்டும். ஆனால் ஊழல்வாதிகளை பாதுகாக்கக் கூடாது. அவர்கள் சுதந்திரமாக சுற் றித் திரிவதற்கு இடமளிக்கவும் கூடாது.

எனவே, முயற்சியாளர்களைப் பாதுகாப்பது எவ்வளவு முக்கியமோ அதுபோல்தான் ஊழல்வாதிகளுக்கு எதிராக கட்டாயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தேங்காய் திருடினாலும் குற்றம் தான், மாங்காய் திருடினாலும் குற்றம் தான். டயமன்ட் திருடினாலும் குற்றம் தான். எனவே, அது சிறிய குற்றம், இது பெரிய குற்றம் என குற்றத்தை பிரித்துப் பார்ப்பதுகூட குற்றம்தான்.

கடந்த காலங்களில் ஊழல், மோசடி களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சட்டம் தற்போது செயற்பட ஆரம்பித் துள்ளது. எனவேதான் தம்மைத் தற் காத்துக்கொள்வதற்காக கள்வர்கள் கூட்டுச் சேர்ந்துள்ளனர். இது ஜனநாய கத்துக்கான கூட்டணி அல்ல. மாறாக கள்வர்களை காப்பதற்கான கூட்டணி யாகும்.

ஜனநாயகத்தை குழிதோண்டி புதைத்தவர்கள், ஜனநாயகம் பற்றி கதைப்பது சாத்தான் வேதம் ஓதுவ தற்கு ஒப்பான செயலாகும். நாட்டில் இன்று நீதி கட்டமைப்பு சுயாதீனமாக செயற்படுகின்றது. எவ்வித அரசியல் தலையீடுகளும் இல்லை.

சட்டம் தனது கடமையை செய்வ தற்குரிய வளங்களை நாம் வழங்கி வருகின்றோம். ஜனநாயகம் பற்றி எதிரணிகள் எமக்கு பாடம் எடுக்க வேண்டியதில்லை. ஜனநாயகம் என் றால் என்னவென்பதை செயலில் காட்டியவர்கள்தான் நாம். கடந்த இரு தேர்தல்களின்போது ஜனநாயகம் எப் படி பாதுகாக்கப்பட்டது என்பது முழு உலகமும் அறியும் என்றார். (ம-7)

## வடக்கு மக்கள்...

முன்னேற்ற மீளாய்வு தொடர்பான விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில், பொதுநிர்வாக உள் நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலா நிதி எச்.எம்.எச்.அபயரத்தன, கடற் தொழில், நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், பொதுநிர் வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் பி.ருவான் செனரத் ஆகி யோரின் பங்கேற்புடன் ஆளுநர் செய லகத்தில் நேற்றுப் புதன்கிழமை இடம் பெற்றது.

இதில் கலந்துகொண்டு வடக்கு மாகாணத்தின் தேவைகள் பிரச்சி னைகள் தொடர்பில் கருத்து தெரிவிக் கையில் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனைத்துத் துறைகளிலும் உள்ள ஆளணி வெற்றிடங்களையும் படிப் படியாக நிரப்பு வதற்கான நட வடிக்கைகள் ஏற் கெனவே ஆரம் பிக்கப்பட்டுள் ளன. ஒவ்வொரு துறையாக அவை நிரப்பப் படும். அதே போல திணைக் களங்களுக்குத் தேவையான வாகனங்களும் வழங்குவதற்கு விரைவான நட வடிக்கை எடுக் கப்படும்.

மனிதவளம் மற்றும் பௌதிக வளம் ஆகியவற் றின் தேவைப் பாடுகளைப் பூர்த்தி செய்யா மல் அபிவிருத் தியை நோக்கி நகர்வது கடினம். அதேநேரம், இந்த மாகாணத் தின் தேசிய உற் பத்திக்கான பங் களிப்பை அதி கரித்தல், வறுமை தணிப்பு, வேலை யின்மையை இல் லாமல் ஆக்கு தல், ஒட்டு மொத்த வடக்கு மக்களின் சனத் தொகையின் நான்கில் ஒரு பங் காக உள்ள பெண் தலைமை த்துவக் குடும்பங் களின் வாழ்வா தாரத்தை உயர்த் துதல் போன்ற விடயங்களுக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்படும் நிதியை உரிய வகையில் பயன் படுத்த வேண் டும் என்பதே எதிர் பார்ப்பாக உள் ளது.

வடக்கு மாகாண சபை யால் கோரப் படும் நிதி 2026 ஆம் ஆண்டுக்கு விடுவிக்கப்படும். கடந்த காலத்தில் இந்த மக்கள் இழந்த உயிர்களைத் தவிர அனைத்தையும் நாம் மீளவும் தருவோம். இங்கே ஏனைய மத்திய அமைச்சுக்களுடன் தொடர்புடைய சில தேவைப்பாடுகளும் சுட்டிக்காட் டப்பட்டன. அது தொடர்பில் தொடர் புடைய அமைச்சுக்கள் ஊடாக கலந் துரையாடுவதற்கு ஏதுவான ஒழுங்கு கள் செய்து தரப்படும். அதே போல நிரந்தர நியமனத்துக்காக விசேட அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப் பிப்பதற்கு ஒழுங்கு செய்யப்படும்.

புதிய உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குவதற்கான கோரிக்கையை முன்வைக்கின்றீர்கள். சபைகளின் வருமானத்தில் 20 சதவீதம் சம்பள மாக வழங்க வேண்டிய நிலையில் புதி தாக உருவாக்கப்படும் சபைகளால் அது முடியுமா? அந்தப் பிரதேசத்தின் மக்கள் தொகை உள்ளிட்ட பல்வேறு விடயங்களைக் கவனத்திலெடுக்க வேண்டும். அதேநேரம் சபைகளின் தரங்களை உயர்த்துவது, புதிய கட் டடங்கள் தொடர்பில் ஒருங்கிணைப் புக்குழுவின் அனுமதியுடன் சமர்ப் பியுங்கள் என்றார். (ம-7)












































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 30.07.2025 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த
எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் கதிர்காமத்தம்பி குமாரசுவாமி

அவர்களின் சபிண்டீகரணக்கிரியைகள் எதிர்வரும் 30.08.2025 சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பினையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

பிள்ளையார் கோவில் ஒழுங்கை,
தும்பளை,
பருத்தித்துறை

தகவல்
குடும்பத்தினர்
076 200 3527

(C-3750)


# உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்
(ஆண்கள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

(C-3755)


# மாப்பிள்ளை தேவை

1. புங்குடுதீவு - வேலணை, இந்து, ரேவதி, 1992, Canada University Graduated, Canada citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 39709
2. தெல்லிப்பளை - ஏழாலை, இந்து, 1994, சித்திரை, Registered nurse, swiss citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 37402
3. மானிப்பாய், இந்து, 1993, MBBS, LLB, Lowyer, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 37015
4. தெல்லிப்பளை - நல்லூர், இந்து, 1994, பூரட்டாதி, MBBS, MD, Doctor, USA citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 36611
5. திருநெல்வேலி, இந்து, 1998, உத்தராடம் MBBS, Doctor, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 36481
6. மீசாலை - புலோலி, இந்து, 1993, அவிட்டம், BSc Hons, Software Engineering, Singapore citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 34791
7. அல்வாய் - கோப்பாய், இந்து, 1993, ரோகினி, Phd Lecturer, canada பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.33627 (நிறைந்த சீதனம் உண்டு)
8. புங்குடுதீவு - வேலணை, இந்து, 1992, பூரம், ACCA Complete, Accountant,UK citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 33548
9. காரைநகர், இந்து, 1992, பூராடம், MBBS, Doctor, Srilanka பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 33307
10. வேலணை, இந்து, 1992, ரேவதி, MBBS, Doctor, Srilanka பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. 32198

நீங்களே www.thaalee.comஇல் பார்த்து உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

(5161)

# பேருந்து விபத்து 11 பேர் காயம்

(தங்காலை)

தங்காலை, நாகுலுகம பகுதியில் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான இரண்டு பேருந்துகள் ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளானதில் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

மாத்தறையிலிருந்து தங்காலை நோக்கிச் சென்ற பேருந்தும், தங்காலையிலிருந்து திக்வெல்ல நோக்கிச் சென்ற மற்றொரு பேருந்துமே மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக நாகுலுகம மற்றும் தங்காலை மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ம-7)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



கடந்த 31.07.2025 அன்று இறைபதம் அடைந்த
எமது குடும்ப ஒளி விளக்கு

## அமரர்
## தங்கராசா செல்வபாலன்
### (சாரதி, பருத்தித்துறை நகர சபை)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 28.08.2025 வியாழக்கிழமை காலை 6.00 மணி அளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் சபிண்டீகரணக் கிரியைகள் 30.08.2025 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். இவ்அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்வதுடன் தாங்களும் வருகை தந்து அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

077 220 8410
077 615 3804

இங்ஙனம்
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தா[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org